மலர் - 04 இதழ் - 02 ஆகஸ்ட் 2026

தமிழணங்கு

(தமிழால் இணைவோம்)

இலக்கிய
சமய
பண்பாட்டுப்
பன்மொழி
மின்னிதழ்

நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர் முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

சுதந்திர தின நல்வாழ்த்துக்கள்

- ஆடி மாதத்தில் அம்மன் வழிபாடும் விரதங்களும்
  முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி
- கண்ணாடிப் பிரதிபலிப்பு முறையில் எழுதப்பட்டதை அறிதல்
  Bp Dr J இரவிக்குமார் ஸ்டீபன் G.
- சங்க இலக்கியங்களில் முருகன்
  மா. மாரிராஜன்
- எளிய முறையில் யாப்பறிவோம்
  நெருப்பலையார். இராம இளங்கோவன்
- குறளில் முன்னுக்குப் பின் முரணா? : சில புரிதல்கள்
  மு. பழநிச்சாமி
- கடல் அரிப்பும் - தடுக்கும் முறைகளும்
  ச. சபாரத்தினம்

தமிழர் இலக்கிய சமய பண்பாட்டு ஆய்விதழ்

தமிழணங்கு

(தமிழால் இணைவோம்)

மலர் – 04 | இதழ் – 02

ஆகஸ்ட் 2026

நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர்
முனைவர் திருமதி செ. இராஜேஸ்வரி

பொறுப்பாசிரியர்
முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு
முனைவர் தேமொழி (அமெரிக்கா)
Dr. புதேரி தானப்பன் (டில்லி)

வடிவமைப்பு
S. ஜெஸிலெட் M.A., NET.,

செயற்கை நுண்ணறிவு படங்கள்
முனைவர் திருமதி செ. இராஜேஸ்வரி

Thamizhanangu
Printed and Published by:
E. Satish Rajkumar (Advocate)
3/422, Thiruvalluvar Street, Dinamani Nagar,
Madurai – 625 018,
Tamil Nadu.
Ph: +91 78711 23226, +91 70109 97639

கட்டுரைகள் அனுப்ப:

rajetamiljuly1@gmail.com

இவ்விதழில் இடம்பெற்றுள்ள கருத்துகள் அனைத்தும் கட்டுரையாளர்களின் சொந்தக் கருத்துகளாகும். அவற்றிற்கும் இதழாசிரியருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

- இதழாசிரியர்

உள்ளடக்கம்

1. ஆடி மாதத்தில் அம்மன் வழிபாடும் விரதங்களும் — 3
   முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி
2. கண்ணாடிப் பிரதிபலிப்பு முறையில் எழுதப்பட்டதை அறிதல் — 9
   Bp Dr J இரவிக்குமார் ஸ்டீபன் G.
3. சங்க இலக்கியங்களில் முருகன் — 14
   மா. மாரிராஜன்
4. உடல் ஒரு மாமிசப் பிண்டமா குவாண்டம் வலைப்பின்னலா? — 18
   டாக்டர் அண்ணாமலை சுகுமாரன்
5. **From Silver Screen to Secretariat** — 23
   C. Rajasahasranamy
6. எளிய முறையில் யாப்பறிவோம் — 31
   நெருப்பலையார். இராம இளங்கோவன்
7. குறளில் முன்னுக்குப் பின் முரணா? : சில புரிதல்கள் — 33
   மு. பழநிச்சாமி
8. கடல் அரிப்பும் - தடுக்கும் முறைகளும் — 43
   ச. சபாரத்தினம்
9. திருப்பாவையில் பெண் மொழி – ஓர் ஒப்பீட்டு ஆய்வு — 48
   முனைவர் சீதா இராமசுவாமி
10. திருவள்ளுவர் பிறப்பும் இறப்பும் — 64
    முனைவர் சிவ இளங்கோ
11. புத்தரின் மரகத ராட்சஸக் கும்பா — 73
    முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி, மதுரை
12. சக்தி விருது வழங்கும் விழா — 77
13. சக்தி விருது விழா காணொளிகள் — 81
14. **TAMILMAGAN's Gene Notes in Vengai Anchor** — 82
    Dr. C. Rajeswari M.A., M.Phil., Ph.D

ஆடுவோமே - பள்ளுப் பாடுவோமே

கவிஞர், எழுத்தாளர், இதழாசிரியர்,
விடுதலை போராட்ட வீரர், சமூக சீர்திருத்தவாதி,
மகாகவி பாரதியார்

ஆடுவோமே - பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று!

பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே - வெள்ளைப்
பரங்கியைத் துரையென்ற காலமும் போச்சே - பிச்சை
ஏற்பாரைப் பணிகின்ற காலமும் போச்சே - நம்மை
ஏய்ப்போருக்கு ஏவல்செய்யும் காலமும் போச்சே!

எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு - நாம்
எல்லோரும் சமமென்பது உறுதியாச்சு;
சங்கு கொண்டே வெற்றி ஊதுவோமே - இதைத்
தரணிக்கெல்லாம் எடுத்து ஓதுவோமே!

எல்லோரும் ஒன்றென்னும் காலம் வந்ததே - பொய்யும்
ஏமாற்றும் தொலைகின்ற காலம் வந்ததே;
இனி நல்லோர் பெரியரென்னும் காலம் வந்ததே - கெட்ட
நயவஞ்சக் காரருக்கு நாசம் வந்ததே!

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - வீணில்
உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்;
விழலுக்கு நீர்பாய்ச்சி மாய மாட்டோம் - வெறும்
வீணருக்கு உழைத்து உடலம் ஓய மாட்டோம்!

நாமிருக்கும் நாடு நமதுஎன்ப தறிந்தோம் - இது
நமக்கே உரிமையாம் என்ப தறிந்தோம்;
இந்தப் பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம் - பரி
பூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்!

ஆடி மாதத்தில் அம்மன் வழிபாடும் விரதங்களும்

முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி, மதுரை
மொழிபெயர்ப்பாளர், பதிப்பாளர், இதழாசிரியர்

தேவர்களின் பகல்பொழுது முடியும் தருணமாக ஆடி மாதம் அமைகிறது. இம்மாதம் தேவர்களின் இருளும் ஒளியும் அற்ற அந்திப் பொழுதாகும் அவர்களின் சந்தியா காலமானதால் இம்மாதத்தை எந்த நல்ல காரியமும் செய்யத் தகாத பீடைமாதமாகக் கருதுகின்றனர்.

அதனால் அம்மன் வழிபாடுகள் மற்றும் சிறப்பு விரதங்கள் மூலமாக இம்மாதத்தைச் சிறந்த மாதமாக மாற்ற முனைகின்றனர். மார்கழி மாதமும் இதைப் போலவே தேவர்களின் அதிகாலைப் பொழுதாக நம்பப்படுவதால் அந்த மாதத்திலும் வேறு எந்த உலக மயமான விசேஷங்களை நிகழ்த்தாமல் இறைவனுக்குப் பிரீதியான வழிபாடுகளை மட்டும் செய்கின்றனர்.

ஆடி மாதமும் பெண்களும்

ஆடி மாதம் பெண்களுக்கு உகந்த மாதமாக அம்மன் கோயில்களில் பல விழாக்கள் நடைபெறுகின்றன. மதுரை மீனாட்சி அம்மனுக்கு மட்டுமான முளைக்கொட்டு விழா நடைபெறும் அன்னை மீனாட்சி ஆடி வீதியில் தினம் வலம் வருவாள். சொக்கர் இதில் பங்கேற்பதில்லை. சங்கரன் கோயிலில் ஆடி தபஸ் நடக்கும் அம்மன் ஒற்றைக் காலில் தவம் இருந்து சிவ பெருமானை சங்கர நாராயணர் வடிவில் தரிசிப்பாள்.

பெண்கள் தங்கள் வீடுகளில் இறந்து போன கன்னிப் பெண்கள் மற்றும் சுமங்கலிப் பெண்களை வழிபட்டு அன்னதானம் வஸ்திர தானம் செய்யும் மாதம் ஆடி மாதம் ஆகும். சுமங்கலிகள் கௌரி விரதம் வரலட்சுமி நோன்பு, கோகிலா விரதம், ஜெய பார்வதி விரதம், வராகி ஏகாதசி, குஷ்ய ஏகாதசி என பல பெயர்களில் விரதம் இருந்து இறைவனை வணங்கும் மாதம் ஆடி மாதம். சகோதர நலம்

காட்டும் பூரி ஜெகநாத் ரத யாத்ரா நிகழும் மாதம் இதுவாகும். பால்கி யாத்ரா என்று கண்ணனுக்கு [விதோபாவுக்கு] யாத்ரா நடைபெறும் மாதம் இது.

அவ்வை நோன்பு

ஆடி மாதம் பெண்கள் மட்டுமே செய்யும் அவ்வை நோன்பு தென் மாவட்டங்களில் பிரசித்தி பெற்றது. இது நள்ளிரவு தொடங்கி அம்மனின் கதை சொல்லி உப்பு போடாத மாவில் பல் உருவங்களைச் செய்து வணங்கி ஆண்களுக்குக் காட்டாமல் அவற்றைப் பெண்கள் மட்டுமே உண்பது வழக்கம். இதை அவ்வையார் நோன்பு என்றும் கூறுவர். அசந்தால் ஆடி, தப்பினால் தை, மறந்தால் மாசி என்ற பால்மொழி இந்த மாதங்களில் மட்டும் இவ்வழிபாடு நடப்பதைக் குறிக்கின்றது.

வராகி நவராத்திரி

மாலை நேரத்தில் பெண்கள் மட்டும் கூட்டமாகச சேர்ந்து வழிபடும் இவ்வராகி நவராத்திரியை சில ர் குப்த ராத்திரி என்றும் வேறு சிலர் காயத்ரி ராத்திரி என்றும் வழங்குகின்றனர். இமாசலப் பிரதேசத்தில் குஹ்ய நவராத்திரி என்பர். சாகம்பரி தேவிக்கு காய்கறி, கனி வர்க்கங்கள வைத்து வணங்க வேண்டும். தினமும் நெய் விளக்கேற்றி ஒற்றை திரி தீபம் ஏற்றி வராகிக்குரிய சிவப்பு வண்ணன்த்தில் செம்பருத்தி மலர்கள் படை சிவப்பு மணி மாலை அல்லது சிவப்பு நிறத்தில் ருத்ராட்சக் கோட்டை உருட்டி ஜெபம் செய்து தச மகாவித்யா என்ற பத்து

தேவிகளையும் வணங்கி வர வேண்டும். இந்த விரதத்தின் போது சைவ உணவு மட்டுமே உண்டு சாத்விக வாழ்க்கை நடத்த வேண்டும். மனிதர்களுக்கு மட்டுமின்றி விலங்கு மற்றும் பறவைகளுக்கு அன்னதானம் செய்வது உத்தமம் ஆகும்.

குப்த நவராத்திரி

வராகி நவராத்திரியை சில குப்த நவராத்திரி என்பர். இதுவும் ஒரு சுமங்கலி பூஜை. ரிஷ்ய சிருங்கர் என்ற முனிவரிடம் வந்து ஒரு சுமங்கலிப் பெண் தன கணவர் தவறான செயல்களில் ஈடுபட்டு வருவதால் தனக்கும் பாவம் சேர்வதாகச சொல்லி அழுதாள். அதற்கு அம்முனிவர் நீ குப்த நவராத்திரி விரதம் இரு உன் கணவனின் பாவம் உன்னை சேராது என்றார். அவளும் அப்படியே செய்தாள். அவள் கணவனும் காலப்போக்கில் திருந்தி விட்டான். அவளும் பாவத்தில் இருந்து விடுபட்டாள். எனவே கணவனைத் திருத்த நினைப்பவர்கள் இந்த ஆடி மாதத்தில் வரும் நவராத்திரியை அனுஷ்டிக்கலாம்.

வராகி அல்லது குப்தா நவராத்திரியின் போது நகம் வெட்டக் கூடாது; முடி வெட்டக் கூடாது, யாரிடமும் கோபபடுதல் ஆகாது. மது, புகை, போதையை முற்றிலும் விலக்கிவிட வேண்டும். பகலில் உறங்கக் கூடாது. கலவி கூடாது. கருப்பு உடை உடுத்த கூடாது.. வராகி நவராத்திரி அல்லது குப்த நவராத்திரியை ஆண்கள் கடைப்பிடித்தால் அவர்களுக்கு அதிகார பதவியை வராகி வழங்குவாள். தீய சக்திகள் அண்டாது. பில்லி சூனியம் கிட்ட வராது. திருஷ்டி அற்றுப் போகும்.

ஆடி செவ்வாய்

ஆடி மாதத்தில் வரும் செவ்வாய் வெள்ளி ஞாயிறு ஆகிய நாட்களில் அம்மன் வழிபாடு சிறப்பாக நடப்பதைக் காணலாம். ஆடி செவ்வாய் நாக வழிபாட்டுக்கும் புற்று வழிபாட்டுக்கும் உகந்தது. நாகரம்மன் , நாகாத்தம்மன், கரு மாரியம்மன் கோயில்களில் ஆடி செவ்வாய் அன்று ஆடு சேவல் பலி கொடுத்து வழிபடுவதுமுண்டு நாகநாதர் கோயில் போன்ற பிரதிஷ்டை பெற்ற கோயில்களில் பலி கொடுக்காமல் ஆடு மற்றும் சேவல்களைக் காணிக்கையாகக் கோயிலுக்கு கொடுக்கின்றனர். கிராமங்களில் பலியிட்டு படையல் போடுகின்றனர்.

முளைப்பாரி திருவிழாவுக்கு செவ்வாய் சாற்றுதல் ஆடி செவ்வாய் அன்று நடைபெறும் முதல் செவ்வாய் அன்று விழா தொடங்குவதாக பறை சாற்றுவர்.

அடுத்த செவ்வாய் அன்று விதை இடுவர் இதை முத்து போடுதல் என்பர். மறு செவ்வாய் அன்று முளைப்பாரி எடுத்துக்கொண்டு போய் நீர் நிலைகளில் ஆற்றில் குளத்தில் கண்மாயில் கரைத்துவிடுவர்.

ஆடிப் பௌர்ணமி

ஆடி பௌர்ணமியுடன் தொடர்புடைய சில சிறப்பான நோன்புகள் விரதங்கள் இருக்கின்றன.. கோகிலா விரதத்தை ஆடி பௌர்ணமியில் தொடங்கி ஆவணி பௌர்ணமியில் முடிவு செய்வர். இது ஒரு மாத விரதம் ஆகும். அடுத்து இவ்விரதத்தின் வைரவர், வராக மூர்த்தி, நரசிம்மன், மகிஷாசுற மர்த்தினி ஆகியோரை வணங்கி வர வேண்டும். கௌரி விரதம் என்பது மற்ற மாநிலங்களை விட குஜராத்தில் பெரும்பான்மையான பெண்கள் மேற்கொள்ளும் விரதம் ஆகும். இவ்விரதம் ஆடி மாதத்தில் சுக்ல பட்ச ஏகாதசி அன்று தொடங்கி ஐந்து நாட்கள் தொடர்ந்து ஆடி பௌர்ணமி அன்று நிறைவு பெறும்.

ஜெயபாரதி விரதம் ஆடி பௌர்ணமிக்கு முன்னும் பின்னும் கடைப்பிடிக்கப்படும் விரதம் ஆகும். இது பெரும்பாலும் குஜராத்தில் பெண்களால் கடைப்பிடிக்கப்படுகிறது. ஆடி மாதத்தில் வளர் பிறையில் திரயோதசி அன்று தொடங்கி ஆறு நாட்கள் கடைப்பிடிக்கப்பட்டு பௌர்ணமி முடிந்து மூன்றாம் நாள் நிறைவு பெறுகிறது. பௌர்ணமிக்கு முதல் மூன்று நாள் பிறகு மூன்று நாள் கடைப்பிடிக்கப்படும் விரதம் ஆகும்.

ஆடி பௌர்ணமி அன்று ஹயகிறிவர் அவதரித்த நாள் என்பதால் அன்று வைணவத் திருக்கோயில்களில் சிறப்பு சேவை ஆராதனைகள் உண்டு.

ஆடி மாதத்தின் ஏகாதசி விரதங்கள்

யோகினி ஏகாதசி ஆடி மாதப் பௌர்ணமி முடிந்து வரும் கிருஷ்ண பட்ச ஏகாதசி யோகினி ஏகாதசி எனப்படும் அன்று விரதம் இருந்தால் தோல் நோய் விலகும் என்பது நம்பிக்கை. சதுர் மாஸ்ய விரதம் என்பது நான்கு மாதங்கள் நடத்தும் விரதம் ஆகும். விஸ்வகர்மா தேவசகாயினி ஏகாதசி என்ற ஆடி மாத சுக்லபட்ச ஏகாதசியில் உறங்கப் போய்விடுவார். நான்கு மாதம் கழித்து பிரபோதினி ஏகாதசி அன்று கண் விழிப்பார். இந்த விரதம் ஆண் பெண் என எல்லோராலும் கடைப்பிடிக்கப்படுகிறது.

ஆடி அமாவாசை

அமாவாசை என்பது நீத்தார் கடன் தீர்க்கும் நாள் அன்று இருட்டு என்பதால் அதை இறந்தோருடன் தொடர்பு படுத்தியது ஆதி மனிதனின் மனம். இன்று வரை அதில் இருந்து மனித எண்ணங்கள் மாறவில்லை அக்கருத்தும் மறையவில்லை. கதிரவன் தெற்கே திரும்பும் ஆடி மாதத்து அமாவசை, நடுவில் நிற்கும் ஐப்பசி மாதத்து அமாவாசை, வட திசை திரும்பும் தை மாதத்து அமாவாசை ஆகிய நாட்களில் இறந்தோர் இப்புமிக்கு வருவர் என்று நம்புவதால் அன்று அவர்களுக்கு படையலிட்டு திருப்தி செய்து அனுப்புகின்றனர். கடலில் நீராடுதலும் கடற்கரையில் வைத்து நீத்தார் கடன் தீர்த்தலும் உண்டு. ஆடி அமாவாசை அன்று மலை ஏறுவதும் சிறப்பாகக் கருதப்படுகிறது. சதுரகிரி மலை போன்றவற்றில் பௌர்ணமியை விட அமாவாசை அன்றிரவு மலையேறுவது சிறப்பான நிகழ்வாகும்.

ஆடி அமாவாசை அன்று மகாபாரதப் போருக்கு முன்பு அரவானைப் பலி கொடுத்த நாள் என்பதால் சேலம் மாவட்டத்தினர் அரவானின் தலையைக் குறிக்கும் வகையில் ஒரு தேங்காயை எடுத்து அததேங்காயின் மூன்று கண்களைத் திறந்து அதற்குள் சக்கரை பொரிகடலை தேங்காய் பூ வைத்து தீயில் முழுத் தேங்காயைச் சுட்டு இறைவனுக்கு படைத்து பின்பு உடைத்து உள்ளிருக்கும் இனிப்பைத் தின்பர்.

கேரளாவில் ஆடி

கேரள மாநிலத்தில் ஆடி மாதத்தை கற்கடக மாசம் என்பர். இம்மாதத்தில் ராம கதை படிப்பதைபெரும் புன்யமாகக் கருதுகின்றனர். எழுத்தச்சன் எழுதிய

ஆத்யாதம இராமாயாணத்தை வீடு தோறும் வாசிக்கின்றனர். திருச்சூரில் உள்ள வடக்குனாதன் கோயிலில் ஆடி பூரம் நாள் அன்று யானைகள் அணிவகுப்பு சிறப்பாக நடைபெறும் அன்று ஆண்கள் வயிற்றில் புலி முகம் வரைந்து வருவதும் உண்டு. அன்று அங்கு நாலமபல் வழிபாடு என்று நாக்கு கோயில்களுக்கு சென்று வருகின்றனர். ஆயுர்வேத சிகிச்சை தொடங்க சிறந்த மாதம் ஆடி மாதமே ன்று நம்புகின்றனர். அந்த மாதம் முழுக்க உணவுக் கட்டுப்பாட்டைப் பின்பற்றுகின்றனர்.

ஆடி பதினெட்டாம் பேருக்கு

ஆடி மாதம் பதினெட்டாம் நாள் காவிரி பாயும் நிலப்பகுதியில் பதினெட்டாம் பெருக்கு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அன்று நீர்நிலைகளுக்கு வழிபாடு செய்யப்படுகிறது. தலைக் காவிரி இருக்கும் கர்நாடகததில் தென்மேற்கு மழை பெய்து காவிரியில் புது வெள்ளம் பெருக்கெடுத்து வரும் அந்நாளில் கரையில் பெண்கள் கூடி பூவும் மங்கலப் பொருட்களும் தீபமும் தண்ணிரில் விட்டு கங்கையம்மனை வணங்குவர். தாலி பெருக்கி போடுவதும் இந்நாளின் சிறப்பம்சம் ஆகும். காவிரி பாயும் மாவட்டங்களில் பெண்களிடம் இப்பழக்கம் இருந்துவருகிறது.

இவ்வாறு ஆடி மாதத்தில் பெண்களும் பெண் தெய்வங்களும் சிறப்பிடம் பெறுகின்றனர். இம்மாதம் மக்கள் நலம் வளம் காண வழிவகுக்கும் மாதமாகும். இம்மாதம் முதல் நெல் வயல்களில் வேளாண் பணிகள் விரைவு பெறுகின்றன. இனி கிராமத்துப் பெண்களுக்கு ஒய்வு என்பதே இருக்காது.

கண்ணாடிப் பிரதிபலிப்பு முறையில் எழுதப்பட்டதை அறிதல்: பெட்சபுரி தங்க மோதிரமும் தாய்லாந்தின் 2,000 ஆண்டுகால தமிழ்நாட்டின் தொடர்பும்

Bp Dr J இரவிக்குமார் ஸ்டீபன் G.

நிறுவுநர்,

திராவிடவியல் மறுமலர்ச்சி நடுவம்

(Center for Dravidian Renaissance)

வரலாற்று ரீதியிலான திருப்புமுனைகள் எப்போதாவதுதான் தனித்து நிகழ்கின்றன. தாய்லாந்தின் பெட்சபுரி (Phetchaburi) பகுதியில் அண்மையில் கண்டெடுக்கப்பட்ட எழுத்துப் பொறிப்புடன் கூடிய தங்க மோதிரத்தின் முக்கியத்துவத்தை நாம் உண்மையாகப் புரிந்து கொள்ள வேண்டுமானால், பண்டைய உலகளாவிய வர்த்தகத்தின் பரந்த வரைபடத்தை நாம் உற்று நோக்க வேண்டும்.

சேர வம்சம் 'குட' (மேற்கு) கடலின் கடல்வழிப் பாதைகளில் ஆதிக்கம் செலுத்தி ஆப்பிரிக்கா, அரேபியா மற்றும் எகிப்தை அடைந்த அதே வேளையில், ஆரம்பகால சோழர்கள் 'குண' (கிழக்கு) கடலைக் கட்டுப்படுத்தினர். இடைக்காலச் சோழப் பேரரசு தனது பிரம்மாண்டமான கடற்படைகளை நிலைநிறுத்துவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே, ஆரம்பகால தமிழ் வணிகர்கள் குண கடலை (வங்காள விரிகுடா) ஒரு பரபரப்பான கடல்வழி நெடுஞ்சாலையாக மாற்றியமைத்து, தமிழகத்தை நேரடியாகத் தாய்லாந்து, மலேசியா, இந்தோனேசியா, கம்போடியா, வியட்நாம் மற்றும் தென் சீனாவுடன் இணைத்திருந்தனர்.

பெட்சபுரி மோதிரத்தை நாம் தனித்து பார்க்கக் கூடாது. மாறாக, கடந்த பல தசாப்தங்களாக நடைபெற்ற தொல்லியல் அகழாய்வுகளின் மூலம் ஏற்கனவே நிரூபிக்கப்பட்டுள்ள ஒரு பரந்த வரலாற்றுப் புதிரின் சமீபத்திய சான்றாகவே இதைக் கருத வேண்டும்.

கடல்வழித் தடம்: காவ் சாம் கயோ முதல் குவான் லுக் பாட் வரை:

தென்கிழக்காசியாவின் முக்கிய தொல்லியல் தளங்களான காவ் சாம் கயோ (Khao Sam Kaeo), பூ காவ் தோங் (Phu Khao Thong), க்ளோங் தோம் (Khlong Thom) மற்றும் குவான் லுக் பாட் (Khuan Luk Pat) ஆகிய இடங்களில் நடைபெற்ற அகழாய்வுகள், இந்த ஆரம்பகால தமிழர்களின் இருப்பிற்கான உறுதியான ஆதாரங்களைத் தொடர்ந்து வழங்கி வருகின்றன.

சங்ககால சோழர் நாணயம் (குவான் லுக் பாட்): தொல்லியலாளர்கள் ஒரு பக்கத்தில் சோழர்களின் சின்னமான புலி உருவமும், மறுபக்கத்தில் யானை உருவமும் கொண்ட ஒரு அரிய செப்பு நாணயத்தைக் கண்டுபிடித்தனர். இரண்டு ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் வணிக வலையமைப்புகளும், அரசியல் அடையாளங்களும், பொருட்களும் தாய்-மலாய் தீபகற்பத்துடன் ஒருங்கிணைந்திருந்தன என்பதற்கு இந்த நாணயம் ஒரு நேரடிச் சான்றாகும்.*

க்ளோங் தோம் உரைக்கல்:

இதற்கு முன்பாகக் கிடைத்த மிக புகழ்பெற்ற சான்று, தெற்கு தாய்லாந்தின் க்ளோங் தோம் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட, கி.மு. 3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு பொற்கொல்லரின் உரைக்கல் ஆகும். இதில் தமிழி (தமிழ்-பிராமி) எழுத்தில் ***'பெரும் ப(த்)தன் கல்'*** *என்று பொறிக்கப்பட்டுள்ளது. இது அந்தத் தலைமுறையின் "916 தர முத்திரை" போன்ற ஒரு பண்டைய தரக் கட்டுப்பாட்டு அமைப்பாகச் செயல்பட்டிருக்கிறது. இதன் மூலம், தமிழி எழுத்தை அறிந்த தமிழ் கைவினைஞர்கள் 2,200 ஆண்டுகளுக்கு முன்பே தாய்லாந்தின் வணிகத் துறைமுகங்களில் தீவிரமாகச் செயல்பட்டு வந்தனர் என்பது தெளிவாகிறது.*

மோதிரத்தின் கட்டமைப்பு: கண்ணாடிப் பிரதிபலிப்பு ஏன் முக்கியமானது?

*பெட்சபுரி தங்க மோதிரத்தை ஆராயும்போது, அதன் வடிவமைப்பு நோக்கமே அதை நாம் எவ்வாறு வாசிக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கிறது. இது ஒரு சாதாரண ஆபரண மோதிரம் அல்ல; இது ஒரு *"முத்திரை மோதிரம் (Signet Ring)"* ஆகும்.*

பண்டைய முத்திரை மோதிரங்கள் தலைகீழாக—அதாவது கண்ணாடிப் பிரதிபலிப்பு (mirror image) வடிவில்—செதுக்கப்பட்டன. அப்போதுதான், ஏற்றுமதி செய்யப்பட வேண்டிய சரக்குப் பெட்டிகளை மூடி மெழுகு அல்லது களிமண்ணில் முத்திரையிடும்போது, அதன் பதிப்பு சரியான திசையில் நேராகத் தோன்றும். இந்த மிக முக்கியமான விவரம், இந்த எழுத்துமுறையின் ஆரம்பகால ஆய்வுகளில் இது கவனிக்கப்படாமல் போயுள்ளது.

1. ***தொல்பொருளின் வகையைக் கண்டறிதல்***
   முத்திரை மோதிரத்தின் கட்டமைப்பு*: மோதிரத்தின் இயற்பியல் அமைப்பை ஆய்வு செய்க. இதிலுள்ள ஆழமான, அச்சு போன்ற செதுக்கல் முறை, இது முத்திரையிடுவதற்காக உருவாக்கப்பட்டது என்பதைக் காட்டுகிறது. எனவே இதற்கு ஒரு தலைகீழ்-வாசிப்பு முறை (reverse-reading layout) தேவைப்படுகிறது.*

2. ***கண்ணாடிப் பிரதிபலிப்புத் திருத்தத்தைப் பயன்படுத்துதல்***

காட்சிப் படிவத்தை மாற்றுதல்: எழுத்தின் வடிவத்தை கிடைமட்டமாக மாற்றி (Flip horizontally). எழுத்துக்களை தலைகீழாகப் பார்ப்பதை விட, அவற்றைக் கண்ணாடிப் பிரதிபலிப்பாகப் பார்க்கும்போது, எழுத்துக்களின் உண்மையான திசையமைப்பு வெளிப்படுகிறது.

3. **எழுத்து வடிவங்களை ஆய்வு செய்தல்**
   தமிழி எழுத்துருக்களுடன் ஒப்பிடுதல்: திருத்தப்பட்ட எழுத்து வடிவங்களையும் அவற்றின் திசையமைப்பையும் தென்னிந்தியாவில் கண்டறியப்பட்ட ஆரம்பகால தமிழி எழுத்து வடிவங்களுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்ய வேண்டும்.

ஒரு புதிய கல்வெட்டியல் வாசிப்பு: "அளர் வைரதன்":

மோதிரத்தின் கண்ணாடிப் பிரதிபலிப்புத் திருத்தத்திற்குப் பிறகு, அந்தப் பொறிப்பு ''அளர் வைரதன்'' என்று வாசிக்கக்கூடிய ஒரு தெளிவான தமிழி எழுத்து வடிவத்தை வெளிப்படுத்துகிறது. இந்தப் பெயரைப் புரிந்து கொள்ள, நாம் பாரம்பரிய தமிழ் மொழி வேர்கள் மற்றும் பொற்கொல்லர்களின் கலைச்சொற்களை ஆராய்வோம்:

தொழில்சார் சொல்லிலக்கணம்:

தட்டான்: பொன் அல்லது வெள்ளியை உருக்கி நகைகளைச் செய்யும் கைவினைஞரைக் குறிக்கும் பாரம்பரியத் தமிழ்ச் சொல். இது 'தட்டு' (உலோகத்தை தட்டுவது அல்லது வடிவமைப்பது) என்ற வேர்ச்சொல்லில் இருந்து உருவானது.

டன்: தமிழ் செவ்வியல் அகராதிகளின்படி, இந்த குறிப்பிட்ட தொழில்நுட்பச் சொல், ஒரு ரத்தினக் கல்லின் ஒளிவிடும் தன்மையை அதிகரிப்பதற்காக அதன் அடியில் வைக்கப்படும் மெல்லிய உலோகத் தகட்டைக்

(foil) குறிக்கிறது. இச்சொல் இப்பெயரை நேரடியாக உயர்தர பொற்கொல்லர் தொழிலுடன் இணைக்கிறது.

க்ளோங் தோம் உரைக்கல் ஒரு ‘பெரும்பட்டனுக்கு’ (தலைமைப் பொற்கொல்லர்) சொந்தமானது என்றால், பெட்சபுரி மோதிரம் ஒரு விசேஷமான நவரத்தின/வைர வணிகரைக் குறிக்கிறது. ”வைரதன்” என்பது முறையான மொழிபெயர்ப்பில் ”வைர ஆபரணங்களைச் செய்யும் பொற்கொல்லர்” *(Diamond Jeweller)* என்று பொருள்படும்.

”அளர்” என்ற சொல் சங்க இலக்கியங்களில் நீர், மஞ்சள்,அல்லது உவர்ப்பு உள்ளிட்ட பொருட்களை கொண்டுள்ளது. இந்தச் சூழலில், ‘அளர்’ என்பது அந்த வணிகரின் அல்லது கைவினைஞரின் தனிப்பட்ட பெயராகப் பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

இறுதி முத்திரை:

“அளர் வைரதன்” என்பவர் தாய்லாந்து தீபகற்பத்தில் செயல்பட்டு வந்த ஒரு செல்வாக்கு மிக்க தமிழ் வைர வணிகராக இருந்திருக்க வேண்டும் என்பது உறுதியாகிறது. இந்த முத்திரை மோதிரம் அவரது தனிப்பட்ட கையொப்பமாக இருந்துள்ளது, இது ஏற்றுமதிக்கான உயர்மதிப்புள்ள நகைப்பெட்டிகளை முத்திரையிடப் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அவர் தனது தாயகத்தை விட்டு தூர தேசத்தில் காலமானபோது, அவரது வர்த்தக அடையாளத்தைப் பாதுகாக்கவும், அதை வைத்து தவறான பயன்பாட்டைத் தடுக்கவும் அவரது தனிப்பட்ட முத்திரை மோதிரம் அவருடனேயே புதைக்கப்பட்டிருக்கலாம். ஒரே ஒரு தொல்பொருள் மட்டுமே வரலாற்றை முழுமையாக மாற்றிவிட முடியாது என்றாலும், தமிழ் வணிகர்கள் வெளிநாட்டுக் கரைகளுக்கு வெறும் பார்வையாளர்களாக மட்டும் செல்லவில்லை—அவர்கள் வாழ்ந்தார்கள், எழுதினார்கள் மற்றும் பண்டைய உலகப் பொருளாதாரத்தின் தூண்களாக வர்த்தகம் செய்தார்கள் என்ற ஒரு உன்னதமான காலகட்டத்தைப் பற்றிய நமது புரிதலை பெட்சபுரி மோதிரம் மேலும் ஆழமாக்குகிறது.

சங்க இலக்கியங்களில் முருகன்

மா. மாரிராஜன்
சோழர் வரலாற்று ஆய்வுச் சங்கம்,
காரைக்கால்.

சங்க இலக்கியங்களில் முருகக் கடவுளின் பல்வேறு நிகழ்வுகளை ஏராளமான பாடல்கள் பதிவு செய்கின்றன. முருகு, முருகன், சேஎய், நெடுவேள், தெய்வம், கடவுள், பழந்தெய்வம் என்ற பெயர்களில் முருகன் அழைக்கப்படுகிறார். வேலன் வெறியாட்டுடன் மேலும் முருகனது பல்வேறு நிகழ்வுகளை சங்கப்பாடல்களில் காணலாம். குறிஞ்சித் தலைலனாக, பெரும் போர் வீரனாக கடம்ப மரத்தில் இருப்பவனாக, யானைமேல் பயணிப்பவனாக, காதலர் பசலை நோய் தீர்ப்பவனாக, கடுஞ்சினம் கொண்டு போர் புரிபவனாக, அழகனுக்கு உவமையாக - முருகனைச் சிறப்பிக்கும் ஒரு சில பாடல்களின் சுருக்கம்.

புறநானூறு - பாடல் 55
//புணரி அலைக்கும் செந்தில் நெடு வேள் நிலைஇய
காமர் வியன் துறை,
கடு வளி தொகுப்ப ஈண்டிய வடு ஆழ் எக்கர்
மணலினும் பலவே//
முருகப்பெருமான் குடியிருக்கும் திருச்செந்தூர்
கடலோர மணலின் எண்ணிக்கையைக் காட்டிலும்
பல்லாண்டுக்காலம் வாழ்க பாண்டியனே.



புறநானூறு - பாடல் 23
//கார் நறுங் கடம்பின் பாசிலைத் தெரியல், சூர் நவை,
முருகன் சுற்றத்து அன்ன, நின் கூர் நல் அம்பின் கொடு
வில் கூளியர்//
கடம்பு மால அணிந்து போரிட்ட முருகனின் கூளியர் படை போல பகைநாட்டில் போரிட்டது பாண்டியன் நெடுஞ்செழியனின் படை.

புறநானூறு - பாடல் 16

//துணை வேண்டாச் செரு வென்றி, புலவு வாள், புலர் சாந்தின், முருகற் சீற்றத்து, உரு கெழு குருசில்//

யாரது துணையுமின்றி கையிலே புலால் நாறும் வாளும் மார்பிலே சந்தனமும் கொண்டு போரில் வெற்றிபெற்றான் முருகன் போல் சீற்றமும் தோற்றமும் கொண்ட இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி.

புறநானூறு - பாடல் 120

//பகைவர் ஓடு கழல் கம்பலை கண்ட
செரு வெஞ் சேஎய் பெரு விறல் நாடே //

புறமுதுகு காட்டி ஓடும் பகைவர்களைக் கண்டு மகிழும் முருகப்பெருமான் போன்றவன் வேள்பாரி.

புறநானூறு - பாடல் 56

//முருகு ஒத்தீயே, முன்னியது முடித்தலின்//

முருகனைப் போல் நினைத்ததை முடிக்கும் பாண்டிய மன்னன்.

அகநானூறு - பாடல் 149

//கூடற் குடாஅது பல் பொறி மஞ்ஞை வெல் கொடி உயரிய, ஒடியா விழவின்,
நெடியோன் குன்றத்து, வண்டு பட நீடிய குண்டு சுனை நீலத்து எதிர் மலர்ப்
பிணையல் அன்ன இவள் அரி மதர் மழைக் கண் தெண் பனி கொளவே//

கூடல் நகருக்கு மேற்குத்திசையில் நெடியோன் குன்றமான முருகனின் திருப்பரங்குன்றம் இருந்தது. நெடியோன் குன்றத்தில் மயில் கொடி உயர்த்தப்பட்டிருக்கும். எப்போதும் இந்தக் குன்றம் விழாக்கோலம் பூண்டிருக்கும். அதில் ஆழமான ஒரு நீர்ச்சுனை உண்டு. அதில் நீலம் பூ பூத்திருக்கும். என் காதலி

அந்த நீலமலர் போன்ற கண்ணினை உடையவள். அவள் கண்ணில் கண்ணீர் பனி நிறையுமாறு விட்டுவிட்டு நெஞ்சமே.

அகநானூறு - பாடல் 181

//ஓம்பு அரண் கடந்த வீங்கு பெருந் தானை
அடு போர் மிஞிலி செரு வேல் கடைஇ
முருகு உறழ் முன்பொடு பொருது களம் சிவப்ப//

மிஞிலி என்னும் படைத்தலைவன் பகைவரின் கோட்டைகள் பலவற்றைக் கைப்பற்றியவன்.. அவன் பெரும் படையுடன் சென்று போர்க்களம் இரத்தத்தால் சிவக்கும்படி முருகக் கடவுள் போலத் தாக்கினான்.

அகநானூறு பாடல் – 158

//புலிக் கணத்தன்ன நாய் தொடர்விட்டு, முருகன் அன்ன சீற்றத்துக் கடுந் திறல்
எந்தையும் இல்லன் ஆக, அஞ்சுவள் அல்லளோ//

இப்போது இவளது தந்தையும் இல்லை. புலிக்கூட்டம் போன்ற நாய்களைச் சங்கிலியில் பிடித்துக்கொண்டு வேட்டைக்குப் போய்விட்டான். முருகன் போல் சீற்றம் கொள்ளும் அவள் தந்தை இருந்தாலாவது இவள் அஞ்சாமல் இருப்பாளே.

அகநானூறு - பாடல் 28.

//முருகு முரண்கொள்ளும் தேம் பாய் கண்ணி, பரியல் நாயொடு பல் மலைப்
படரும் வேட்டுவற் பெறலொடு அமைந்தனை; யாழ நின்//

தேன் ஒழுகும் மாலை அணிந்துகொண்டு, வேட்டை நாயுடன் வந்த உன் வேட்டுவன் அழகில் முருகனோடு போட்டி போடுபவனாக இருக்கிறான். அவனைப் பெறுவதோடு நீ நின்றுவிட்டாய்.

அகநானூறு - பாடல் 59

//சூர் மருங்கு அறுத்த சுடர் இலை நெடு வேல், சினம் மிகு முருகன் தண்
பரங்குன்றத்து//

சூரனைக் கொன்று சுடரும் வேலை உடையவனும் சினம் மிக்க முருகன் குடிகொண்டுள்ள குன்றம் திருப்பரங்குன்றம்.

அகநானூறு - பாடல் 1

//வண்டு படத் ததைந்த கண்ணி ஒண்கழல் உருவக் குதிரை மழவர் ஓட்டிய முருகன் நற்போர் நெடுவேள்//

வண்டுகள் மொய்க்கும்படி அடர்ந்த மலர்களையுடைய மாலையையும் ஒளிரும் கழல்களையும் அணிந்த அஞ்சத்தக்க குதிரைகளையுடைய மழவர்களை வென்ற முருகனைப் போல், நல்ல போர் வெற்றியை உடையவன் உன் தலைவனாம் தோழி.

நற்றிணை - பாடல் 225

//முருகு உறழ் முன்பொடு கடுஞ் சினம் செருக்கிப் பொருத

யானை வெண் கோடு கடுப்ப//

முருகக் கடவுள் போன்ற வலிமையோடு தன் சினத்தால் செருக்குற்று போரிட்ட யானையின் வெள்ளைக் கொம்பு கரை படிந்து சிவப்பாக ஏந்திய மேலே வளைந்த நிலையில் காணப்படுவது போல

குறுந்தொகை - பாடல் 1

//செங்களம் படக் கொன்ற அவுணர்த் தேய்த்த

செங்கோல் அம்பின் செங்கோட்டி யானைக்

கழல் தொடிச் சேஎய் குன்றம், குருதிப் பூவின் குலைக் காந்தட்டே//

போர்க்களம் குருதியால் செந்நிறம் ஆகும்படி அசுரர்களைக் கொன்று அழித்த குருதியால் சிவந்த திரண்ட அம்பினையும், குருதியால் சிவந்த தந்தத்தையுடைய யானையையும், நெகிழுமாறு அணியப்பட்ட தொடியையும் உடைய முருகக் கடவுளின் இம்மலையானது சிவந்த காந்தள் மலர்க் கொத்துக்களை உடையது.

குறுந்தொகை - பாடல் 87

//மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள்

கொடியோர்த் தெறூஉம் என்ப யாவதும்

கொடியர் அல்லரெங் குன்றுகெழு நாடர்//

ஊரின் மன்றத்தில் உள்ள கடம்பு மரத்தில் தங்கியுள்ளவனும் தீயவர்களுக்கு அச்சத்தை தந்து வருத்துபவனும் ஆன பழமையான தெய்வம் உள்ள குன்றுகள் பொருந்திய நாட்டையுடைய எம் தலைவர்.

உடல் ஒரு மாமிசப் பிண்டமா குவாண்டம் வலைப்பின்னலா?
திருக்குறளின் 'மருந்து' அதிகாரமும் குவாண்டம் உயிரியலும்: வளர்சிதை மாற்றத்தின் விளக்கங்கள்

டாக்டர் அண்ணாமலை சுகுமாரன்
சித்தரியல் ஆராய்ச்சியாளர், புதுவை

உலகப் பொதுமறையான திருக்குறளில், திருவள்ளுவர் 'மருந்து' என்னும் தனி அதிகாரத்தில் (அதிகாரம் 95) மனித உடலின் ஆரோக்கியம், உணவு மற்றும் நீடித்த ஆயுள் பற்றிய வாழ்வியல் நெறிமுறைகளை வகுத்துள்ளார். பொதுவாக இது ஒரு மருத்துவ ஒழுக்க நெறியாகப் பார்க்கப்பட்டாலும், இதன் ஆழத்தில் நவீன குவாண்டம் உயிரியல் (Quantum Biology) மற்றும் வளர்சிதை மாற்றக் கோட்பாடுகளுக்குரிய (Metabolic Theories) பல நுட்பமான அறிவியல் உண்மைகள் பொதிந்துள்ளன.



வள்ளுவர் காட்டிய உடலியல் நெறிமுறைகளுக்கும், நவீன உயிரியலில் அணுக்களுக்குள் நடக்கும் குவாண்டம் ஆற்றல் மாற்றங்களுக்கும் உள்ள தொடர்பை இங்கு ஆய்வு நோக்கில் காண்போம்.

1. **'மாறுபாடு இல்லாத உண்டி' — குவாண்டம் ஒத்திசைவு** (Quantum Coherence)

வள்ளுவர் மருந்து அதிகாரத்தில் ஆரோக்கியத்தின் முதன்மை விதியாகக் குறிப்பிடுவது:

"மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு." (திருக்குறள் - 945)

நவீன குவாண்டம் உயிரியல் நோக்கு:

நமது உடலில் உள்ள செல்கள் மற்றும் டி.என்.ஏ (DNA) மூலக்கூறுகள் மிகத் துல்லியமான 'குவாண்டம் ஒத்திசைவு' (Quantum Coherence) நிலையில் இயங்குகின்றன. நாம் உட்கொள்ளும் உணவு என்பது வெறும் கலோரி (Calorie)

ஆற்றல் மட்டுமல்ல; அது நமது உடலுக்குள் செல்லும் ஒரு 'தகவல் பொதி' *(Information Packet)* ஆகும்.

உடலின் இயல்புக்கு 'மாறுபாடான' உணவுகளை (செயற்கை இரசாயனங்கள், மரபணு மாற்றப்பட்ட உணவுகள் அல்லது முறையற்ற கலவை உணவுகள்) நாம் உட்கொள்ளும்போது, அவை செல்களுக்குள் இருக்கும் குவாண்டம் ஒத்திசைவைக் குலைக்கின்றன. இதனை நவீன உயிரியலில் 'உயிரியல் இரைச்சல்' *(Biological Noise)* அல்லது மூலக்கூறு குழப்பம் என்கிறோம். வள்ளுவர் 'மாறுபாடு இல்லாத உண்டி' என்று கூறுவது, உடலின் குவாண்டம் அலைவரிசையோடு ஒத்திசைந்து போகும், இயற்கையான உணவுகளைத் தேர்ந்தெடுத்து உண்ணும் நெறியையே ஆகும்.

2. **'அற்றால் அறவறிந்து உண்க' — செல்லுலார் ஆட்டோஃபேஜி *(Cellular Autophagy)***

உணவு உண்ணும் கால இடைவெளியைப் பற்றி வள்ளுவர் பல குறள்களில் வலியுறுத்துகிறார்:

"அற்றால் அறவறிந்து உண்க அதுவுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு." (திருக்குறள் - 942)

மற்றும்,

"அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறின்றித்
துய்க்க துவரப் பசித்து." (திருக்குறள் - 944)

நவீன வளர்சிதை மாற்ற நோக்கு:



முன்பு உண்ட உணவு 'அற்றது' (முழுமையாகச் செரிமானம் அடைந்தது) என்பதை அறிந்து, நன்கு பசித்த பிறகு அடுத்த உணவை உண்ண வேண்டும் என்கிறார் வள்ளுவர். 2016-ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்ற **'ஆட்டோஃபேஜி' *(Cellular Autophagy* - செல்கள் தங்களைத்**

தாமே தூய்மைப்படுத்துதல்) என்னும்ட் கோட்பாடு இதனையே விளக்குகிறது.

மனித உடல் தொடர்ந்து உணவு உண்ணாமல், செரிமானப் பாதை ஓய்வடையும் போது *(Fasting/Hunger State)*, செல்கள் தங்களுக்குள் இருக்கும் பழுதடைந்த புரோட்டீன்கள், வீணான நுண்ணுறுப்புகள் மற்றும் நச்சுப் பொருட்களைத் தடிமனாக்கி, அவற்றை மறுசுழற்சி செய்து ஆற்றலாக மாற்றத் தொடங்கும். செரிமானம் முழுமையாக முடிவதற்குள் மீண்டும் மீண்டும் உணவை உட்கொண்டால், இந்த ஆட்டோஃபேஜி எனும் தூய்மைப்படுத்தும் குவாண்டம் உயிரியல் செயல்முறை தடைபட்டு, செல்களுக்குள் நச்சுகள் தேங்கி வயோதிகமும் நோய்களும் உண்டாகின்றன.

3. **மிகினும் குறையினும் நோய் — மைட்டோகாண்ட்ரியல் எலக்ட்ரான் கடத்தல்** ***(Electron Transport Chain)***

உடலின் மூன்று ஆற்றல் நிலைகளான வாத, பித்த, கபங்களின் சமநிலையைப் பற்றி வள்ளுவர் மருந்து அதிகாரத்தின் முதல் குறளிலேயே பேசுகிறார்:

"மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று." (திருக்குறள் - 941)

குவாண்டம் உயிரியல் நோக்கு:



வளி (காற்று/வாத), அழல் (நெருப்பு/பித்த), ஐயம் (நீர்/கப) ஆகிய மூன்றும் உடலின் வளர்சிதை மாற்றத்தைக் கட்டுப்படுத்தும் குவாண்டம் ஆற்றல் நிலைகளாகும். நவீன குவாண்டம் உயிரியலில், செல்லின் ஆற்றல் மையமான மைட்டோகாண்ட்ரியாவிற்குள் *(Mitochondria)* எலக்ட்ரான்கள் மற்றும் புரோட்டான்கள் கடத்தப்படும் ஒரு நுட்பமான குவாண்டம் பாய்ச்சல் *(Quantum Tunneling)* நிகழ்கிறது.

- எலக்ட்ரான்களின் இந்த ஓட்டம் 'மிகைந்தால்' *(Overloading due to overeating)*, அங்கு 'ஆக்சிஜனேற்ற அழுத்தம்' *(Oxidative Stress / Free Radicals)* ஏற்பட்டு செல்கள் அழிகின்றன.

- *எலக்ட்ரான் ஓட்டம் 'குறைந்தால்' (Underloading / Energy deficiency), உடலின் ஆற்றல் (ATP) உற்பத்தி குறைந்து சோர்வு ஏற்படுகிறது.*

வள்ளுவர் 'மிகினும் குறையினும் நோய் செய்யும்' என்று கூறுவது, இந்த அணு அளவிலான எலக்ட்ரான் கடத்தல் சமநிலையில் ஏற்படும் மாற்றங்கள் எவ்வாறு ஒட்டுமொத்த நரம்பு மற்றும் உடலியல் மண்டலத்தைப் பாதித்து நோயாக மாறுகின்றன என்பதையே ஆகும்.

4. **'உண்டான் மிதப்பக் கொடுப்பான்' — என்ட்ரோபி மற்றும் ஆற்றல் விரயம் (Entropy and Energy Dissipation)**

உணவின் அளவைப் பற்றி வள்ளுவர் குறிப்பிடும்போது:

அளவறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
களவறிந்து உவன்பான் நோய்." (திருக்குறள் - 946)

மற்றும்,

"இழிவறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபேர் இரையான்கண் நோய்." (திருக்குறள் - 947)

வெப்ப இயக்கவியல் மற்றும் குவாண்டம் நோக்கு:

இயற்பியலின் இரண்டாம் வெப்ப இயக்கவியல் விதியின்படி, பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து அமைப்புகளும் 'என்ட்ரோபி' (Entropy - சீர்குலைவு நிலை) நோக்கி நகர்கின்றன. உயிருள்ள செல்கள் தங்களின் குவாண்டம் ஒழுங்கமைப்பைத் தக்கவைத்துக் கொள்ள தொடர்ந்து ஆற்றலைச் செலவிட வேண்டும்.



மனிதன் தன் உடலின் செரிமானத் திறனின் அளவை அறியாமல், 'கழிபேர் இரையாக' (மிக அதிக அளவில்) உணவை உட்செலுத்தும்போது, அந்த உணவை உடைத்துச் செரிப்பதற்கே உடலின் ஒட்டுமொத்தக் குவாண்டம் ஆற்றலும்

வீணடிக்கப்படுகிறது. இதனால் செல்களின் என்ட்ரோபி (குழப்ப நிலை) அதிகரித்து, உடலின் நோயெதிர்ப்பு ஆற்றல் குறைகிறது. அளவறிந்து உண்ணும் போது, உடலின் ஆற்றல் விரயமாகாமல் தற்காக்கப்பட்டு, அது உடலின் பழுதுநீக்கப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வகுத்த 'மருந்து' அதிகாரத்தின் நெறிமுறைகள், வெறும் மேலோட்டமான உணவுப் பழக்கங்கள் அல்ல. அவை மனித உடலின் அணுக்களுக்குள், செல்களுக்குள் நடக்கும் குவாண்டம் வளர்சிதை மாற்ற விதிகளுக்கு முற்றிலும் உட்பட்ட துல்லியமான அறிவியல் வழிமுறைகளாகும்.

"அறவறிந்து உண்பது" என்பதும் "மாறுபாடின்றித் துய்ப்பது" என்பதும் நமது உடலின் குவாண்டம் ஒத்திசைவைக் காத்து, மைட்டோகாண்ட்ரியல் ஆற்றலைச் சீராக வைத்து, ஆயுளை நீட்டிப்பதற்கான வழிமுறைகளே என்பதை நவீன குவாண்டம் உயிரியல் இன்று நமக்குத் தெளிவுபடுத்துகிறது.

*மேற்கத்திய அறிவியல் இன்றுதான் அதிநவீனக் கருவிகள் கொண்டு அணுவின் ரகசியங்களை ஆராய்ந்து 'செல்லுலார் ஆட்டோஃபேஜி' என்று பெயரிட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால், நம் வள்ளுவப் பேராசான் எந்தவொரு கருவியுமின்றி, தன் அக உணர்வால் உடலின் குவாண்டம் விதியை உணர்ந்து **அற்றால் அறவறிந்து உண்க** என்று உலகிற்கு எளிமையாக ஓதிச் சென்றுவிட்டார். கருவிகள் காட்டும் அறிவியல் தற்காலிகமானது; ஆனால் நம் ஞானிகள் காட்டிய அனுபவ அறிவியல் என்றும் நிலையானது!*

From Silver Screen to Secretariat

The Psychology of Democratic Leadership - The TEL Model

C. Rajasahasranamy,
namygopal@gmail.com

Chapter 2

From Political Creation to Emotional Acceptance: The Journey of Building Public Trust



"People may choose a leader with their vote but they accept a leader with their trust"

Why do some elected leaders become deeply loved and trusted while others remain merely holders of political office?

Leadership evolves in stages. Elections create political legitimacy, but only the people can bestow emotional legitimacy. Democratic leadership becomes enduring only when citizens begin to feel that the leader genuinely understands their aspirations, shares their struggles and represents their collective hopes. The Tamil Evolutionary Leadership- TEL Model explains that this transformation occurs through a psychological partnership between the people and the leader. The people continue to observe, evaluate and emotionally connect with the leader

long after the election. This process gradually creates public trust—the foundation upon which all future leadership rests.

2.1 Political Support and Emotional Acceptance are Not the Same

Winning an election signifies political success, but emotional acceptance is something entirely different. Political support may arise from party loyalty, campaign strategy or temporary public sentiment, whereas emotional acceptance develops only when people repeatedly experience sincerity, consistency, empathy and integrity in a leader's actions. Many leaders have secured electoral victories without earning lasting public trust, while others have gradually won the hearts of the people through dedicated service and ethical conduct. The TEL Model therefore distinguishes between political creation, which grants authority, and emotional acceptance, which grants legitimacy in the minds and hearts of the people. Political office may establish a leader, but emotional acceptance determines whether that leader becomes an enduring democratic force.

2.2 The Development of Emotional Trust

Trust is never created overnight, it evolves through consistent behaviour and repeated positive experiences between the leader and the people. Citizens carefully observe whether a leader honours promises, remains accessible, responds honestly during crises, accepts criticism with maturity and places public welfare above personal interest. Every decision, every public interaction and every act of service either strengthens or weakens this psychological bond. The TEL Model recognises emotional trust as the bridge that connects political authority with lasting democratic leadership. Once trust becomes deeply rooted, people begin to see the leader not merely as an elected representative but as someone worthy of their confidence and respect.

2.3 Shared Identity: When the Leader Becomes "One of Us"

Leadership reaches a higher stage when people no longer view the leader as a distant authority but as someone who genuinely represents their aspirations, values and identity. This shared identity develops when leaders remain connected with ordinary citizens, understand their everyday challenges and demonstrate empathy through both words and actions.

Gradually, people begin to feel that the leader belongs to them rather than above them, creating a powerful sense of psychological ownership. The TEL Model explains that this emotional identification strengthens democratic stability because the relationship between the leader and the people becomes rooted in mutual understanding, shared purpose and collective trust rather than mere political affiliation.

2.4 Communication: The Bridge Between Leadership and Public Trust

Communication is far more than delivering speeches or making public announcements; it is the continuous process through which leaders build confidence, reduce uncertainty and strengthen emotional relationships with the people. Democratic leaders communicate effectively when they speak honestly, listen attentively, acknowledge public concerns and ensure that their actions consistently reflect their words.

Citizens judge not only the quality of a leader’s speeches but also the sincerity behind them. Transparent communication, particularly during difficult periods, often strengthens public confidence because it demonstrates respect, accountability and integrity. The TEL Model therefore considers communication an essential psychological bridge connecting leadership with public trust.

2.5 Emotional Acceptance: The Foundation of Future Expectations

Once people emotionally accept a leader, they naturally begin expecting higher standards of performance, ethical governance and visionary leadership.

Trust creates hope, and hope gives rise to expectations for better administration, greater transparency, social progress and responsible decision-making. These expectations should not be viewed as burdens but as evidence of the people's confidence in the leader's ability to serve them effectively. According to the TEL Model, emotional acceptance is not the destination of leadership but the beginning



of a new phase in which public expectations continue to shape and elevate the leader's democratic journey.

Trust is earned through consistent action.

Authenticity creates stronger emotional connections than popularity.

The TEL Model

People identify leaders.

People create leaders.

People guide leaders.

People sustain leaders.

Great leaders never forget the people who made their journey possible.

Bridge to Chapter 3

Once people emotionally accept a leader, their trust naturally evolves into expectations. The next chapter explores how emotional acceptance gives birth to

public expectation, where citizens begin looking to their leader not only for representation but also for a better future, higher standards of governance and meaningful societal transformation.

Hello CM . . .

The People's Policy

Park Revolution

Neighbourhood Community Park Mission

Building Human Capital through Neighbourhood Community Parks:

Human resources are the greatest asset of any nation. Every investment that enhances the physical, mental, emotional and social well-being of citizens contributes directly to sustainable economic development, social progress and improved quality of life. Tamil Nadu has consistently demonstrated national leadership by investing in education, healthcare, nutrition, women's empowerment and social justice. As the State progresses towards becoming one of India's leading knowledge-based and industrial economies, a new generation of public policy challenges has emerged that requires innovative and integrated solutions.

Consequence of Change in Lifestyle:

Rapid urbanisation, changing lifestyles and increasing dependence on digital technology have significantly altered the daily lives of children, youth and adults. Smartphones, computers and digital entertainment platforms have become indispensable for education, employment and communication.

However, excessive recreational screen time, declining physical activity, shrinking public open spaces and reduced opportunities for neighbourhood interaction have created serious concerns relating to physical health, mental well-being and community life.

To Save the Future Pillars of our Nation:

Children and adolescents are among the most affected. Outdoor play, once an essential part of childhood, has steadily declined in many neighbourhoods. Recreational activities have increasingly shifted indoors, resulting in reduced physical fitness, weaker social interaction and greater dependence on digital devices. Similar changes have affected adults through sedentary occupations, occupational stress and lifestyle-related diseases, while senior citizens often lack safe and accessible public spaces for exercise and social engagement.

Green Space does Great Wonders:



Scientific evidence published by the World Health Organization (WHO), UNICEF and numerous international research institutions demonstrates that *neighbourhood parks and green public spaces contribute significantly to improved physical health, reduced stress, enhanced mental well-being, healthier childhood development, stronger social

cohesion and improved environmental quality.* Parks therefore represent much more than recreational amenities—they are essential public infrastructure that supports human development and preventive healthcare.

Development of Human Resources:

This report proposes the establishment of the Tamil Nadu Neighbourhood Community Park Mission, a comprehensive four-year initiative designed to ensure that every citizen has access to a safe, inclusive and vibrant neighbourhood community park.

Not only New But also Renovation:

The Mission recommends adopting a planning benchmark of one fully functional neighbourhood community park for every 15,000 residents. Based on Tamil Nadu's estimated population of approximately 8.4 crore, the State would require around 5,600 neighbourhood community parks. Rather than relying exclusively on new construction, the Mission recommends renovating existing parks and creating new parks only in areas where significant gaps exist, thereby making efficient use of public resources and reducing land acquisition requirements.

Development of Parks as Community Activity Centres:

The proposed parks are. envisioned as Neighbourhood Community Activity Centres, equipped with walking and jogging tracks, children's play areas, open gyms, yoga and meditation spaces, reading gardens, senior citizens' activity zones, biodiversity gardens, rainwater harvesting systems, public conveniences,

universal accessibility and community gathering spaces. These parks should serve as centres for recreation, preventive healthcare, environmental education, cultural activities and community engagement throughout the year.

The Collaborative Governance Model:

In this model by involving the Government of Tamil Nadu, Urban Local Bodies, Resident Welfare Associations, educational institutions, Corporate Social Responsibility (CSR) partners, non-governmental organisations and community volunteers. Through shared ownership and active public participation, neighbourhood parks can become vibrant, safe and sustainable public assets.



Investment in Human Capital:

The Tamil Nadu Neighbourhood Community Park Mission is not merely a proposal for developing parks. It is a comprehensive strategy for investing in human capital, promoting preventive healthcare, reducing excessive screen dependency, strengthening families, improving environmental sustainability and enhancing the overall quality of life of every citizen.



By adopting this Mission, Tamil Nadu has the opportunity to become *India's "State of Parks"* and establish a nationally replicable model demonstrating how investments in neighbourhood green space results in the human development.

Just as the Green Revolution transformed agriculture this Park Revolution can transform public health, strengthen families, nurture healthier children, build resilient communities and create a greener, happier Tamil Nadu.*

எளிய முறையில் யாப்பறிவோம்

நெருப்பலையார். இராம இளங்கோவன்,
பொருளாளர்,
பெங்களூர் தமிழ்ச் சங்கம்,
பெங்களூர்.

பாடம்:43.

பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா

பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா *என்பது பற்பல தாழிசைகள் வருவதால் (பல+ தாழிசைகள்= பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா) ஆயிற்று. தாழிசைகளின் இடையிடையே தனிச்சொற்கள் பெற்றும் வரும். பெறாமலும் வரும். நான்கடிகள் கொண்ட ஒரு தரவும், இரண்டிரண்டு அடிகள் பெற்ற ஆறு தாழிசைகளும், பின்னர் ஒரு தனிச்சொல்லும், அடுத்து, நான்கடியில் ஆசிரியச் சுரிதகமும் பெற்று வருவதே பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா ஆகும்.*

இப் பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பாவில் தரவை விட தாழிசைகளின் அடிகள் குறைந்தவையாக வரும். தரவடிகளும் தாழிசைகளின் அடிகளும் இயற்சீர்களும் காய்ச்சீர்களும் இரண்டறக் கலந்து வரும். சுரிதகத்தில் மட்டும் இது ஆசிரியச் சுரிதகம் என்பதால் ஈரசைகள் கொண்ட இயற்சீர்கள் மட்டுமே அமையும். சுரிதகத்தில் ஈற்றயலடி என்ற ஈற்றடியின் முந்தைய அடி மட்டும் சிந்தடியாக முச்சீர் பெற்று வரும். ஈற்றடியில் ஈற்றுச் சீரின் ஈற்றசை ஏகாரத்தில் முடியும்.

எல்லா அடிகளும் இரண்டடிக்கோர் எதுகைப் பெற்று வரும். அடி தோறும் முதல் சீருக்கும் மூன்றாம் சீருக்கும் பொழிப்பு மோனை அமையும். தரவின் அடிகளைக் காட்டிலும் தாழிசையில் குறைந்த அடிகளாக வருவதே தாழிசை என்று உணர்க. இனி கீழே பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பாவுக்காக ஒரு எடுத்துக் காட்டுப் பாடலைக் காண்போம்:

நலன்விளைய நடந்திடுவோம்!

(பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா)

நான்கடித் தரவு:

கார்முகிலின் நடவுகளால் கனிந்துமழைப் பொழிந்திடுமே!
நீர்நடந்தால் ஆறுகளாய் நீண்டோடிப் பயிர்விளையும்;
பேர்நடந்தால் புகழோங்கிப் பெரிதுவக்க வாழலாமே!
சீர்நடந்தால் எப்பொழுதும் செல்வாக்கு வந்திடுமே!

இரண்டடியால் அமைந்த ஆறு தாழிசை:

தாழிசை:1

பூக்களதின் நடவுகளால் பூமாலை உருவெடுக்கும்!
பாக்களுமே நடந்தாலே பாரினிலே எழுச்சியோங்கும்!

தாழிசை:2

நாக்கதுவும் நடந்தாலே நற்றமிழின் சொல்நடக்கும்;
வாக்குகளும் நடந்தாலே வளமான கருத்திருக்கும்!

தாழிசை:3

காற்றெங்கும் நடந்தாலே கடும்வெப்பம்
கரைந்திடுமே;
ஊற்றெங்கும் நடந்தாலே ஓடிடுமே வறுமையெலாம்!

தாழிசை:4

நாற்றுக்குள் ஓடுகின்ற நண்டுதேடும் கொக்கெனவே
ஏற்றத்தை அடைந்திடவே ஏய்த்துமேதான் பிழைக்கலாமா?

தாழிசை:5

எழுத்தெல்லாம் நடந்தாலே ஏற்றமிகு அசைகளாகும்;
எழுத்துகளால் அசைநடக்க எழுந்துநிற்றல் பாட்டாகும்!

தாழிசை:6

நல்வினையில் உலகமெலாம் நடந்திடவே வினைச்செய்வோம்;
அல்லவைகள் அழிந்திடவே அனைவருமே ஒன்றிணைவோம்!

தனிச்சொல்: *இதனால்,*
நான்கடி ஆசிரியச் சுரிதகம்:
பற்றுகள் எங்கும் படர்ந்திட வேண்டும்;
அற்றிடா நட்பு அனைத்தும் வேண்டும்;
கற்றதைப் போல வையம்
முற்றும் நடந்திட முயற்சி கொள்வமே!

பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா *என்ற இப் பா'வகையில் யாப்பிலக்கண வாய்பாட்டையும், எடுத்துக் காட்டுப் பாடலையும் பயின்று பயிற்சி எடுத்து பாவகையை குறைவற அறிந்தோம்; அடுத்த பாடத்தில்,* ***மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாப்*** *பற்றிப் பயின்று பயிற்சி எடுப்போம்..*
யாப்பிலக்கணம் வளரும்.

குறளில் முன்னுக்குப் பின் முரணா? : சில புரிதல்கள்

மு. பழநிச்சாமி
நாகமலை,
மதுரை -19
மின்னஞ்சல் : vmps834@gmail.com

1. (அ) சாதல் கொடுமை × சாதல் இனிமை

சாதல் மிகத் துன்பமான ஒன்று என்பதை கொன்றன்ன இன்னா செயினும் (109) என்றும் சாதலின் இன்னாததில்லை (230) என்றும் கொலையில் கொடியார் (550) என்றும் பலபடப் பேசிக்காட்டும் வள்ளுவர், சாதல் இனிது என்னும் பொருள்பட, சாதல் அறங்கூறும் ஆக்கம் தரும் (183) என்றும் சாதலின் இன்னாததில்லை இனிது அதூஉம் (230) என்றும் ஊதியம் இல்லை உயிர்க்கு (231) என்றும்,

ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று (967)
என்றெல்லாம் பேசிக் காட்டுகிறார்.

இது, வட துருவத்திற்கும் தென்துருவத்திற்கும் உள்ள வேறுபாடு போல, முரணாகத் தோன்றலாம்.

(ஆ) மானம்:

தன் நிலைமை தாழாமல், எப்பொழுதும் பண்பாட்டுப் பெருமிதத்துடன் இருக்கும் மேன்மை, மானம் எனப்படும். மானத்திற்கு என, தனி யொரு அதிகாரம் வகுத்து, அதில் மானத்தைப் பற்றி அலசி ஆராய்ந்து அதன் இன்றியமையாமையை வலியுறுத்திப் பேசுவார் வள்ளுவப் பெருந்தகை, மானத்தை உயிரினும் மேலாகப் போற்ற வேண்டும் என்பதை,

'மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர் நீப்பர் மானம் வரின்' (969)
எனச் சொல்லிக் காட்டுவார்.

இவ்வாறு மானத்திற்கு முதன்மை தந்து பேசும் வள்ளுவர்,
குடிசெய்வார்க் கில்லை பருவம் மடி செய்து
மானம் கருதக் கெடும்' (1028)

என இங்கு குடி செயல் வகை அதிகாரத்தில், மானம் பார்க்கக் கூடாது எனச் சொல்லி அதைச் சற்றுத் தள்ளி வைக்க வேண்டும் என்பார்.

மானம் என்னும் அதிகாரத்தில் மானத்தைப் பற்றி அழுத்தம் பெறப் பேசிய வள்ளுவர், இங்கு மானம் பார்க்கக் கூடாது என்று சொல்வது, மேலெழுந்த வாரியாகப் பார்க்கும் பொழுது, எவ்வளவு பெரிய முரண் என்று நமக்குத் தோன்றுவது இயல்பே.

எந்தச் சூழலில், மானம் பேசப்படுகிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். மானம் என்னும் அதிகாரத்தில் பேசப்படும் மானம், வாழ்வியலின் உயர்வைச் சொல்வது. இங்கு பேசும் மானம், தான் பிறந்த குடியைச் சிறந்த படியாக உயர்த்தத் துணிந்தவர், சோம்பல் கொள்ளாமல், மானம் கருதாமல், எதிர்வரும் இடையூறுகளைத் தகர்த்து முன்னேற வேண்டும் என்பதைச் சொல்வது.

உழைத்துத் தன் குடியை உயர்த்த வேண்டிய நேரத்தில், வீண் கௌரவம் பார்த்து உழைக்காமல் சோம்பி இருக்கும் இழிவைச் சொல்ல வந்த சூழலில், மானம் பார்க்கக் கூடாது எனப் பேசுகிறார்.

எனவே, இது முரண் இல்லை; வாழ்வியலின் பன்முகத்தன்மை (Complexity of life) என்பது நமக்குப் புலப்படும்.

(இ) வாழ்தலின், சாதல் ஆக்கம் தரும்

இல்லாத இடத்துப் பழித்துப் பேசி, எதிரே பொய்யாய்ப் புகழ்ந்து இச்சகம் பேசித் திரிவோர், பூமியிலிருந்து வாழ்வதைவிட சாவது நல்லது என்று சொல்லி சாவுக்கு வரவேற்புக் கொடுக்கிறது இக்குறள்.

இந்தச் சூழ்நிலையில் வைத்துப் பார்க்கும் பொழுது இக்குறளில் முரண் இல்லை. மாறாக புத்திக்குள் உண்ணப்படும் தேனாய், வாசகர் இதயம் களிக்கும் வகையில், புத்தித் தத்துவத்தில் அனுபவிக்கக் கூடியதாக அமைந்துள்ளதை எண்ணி இன்புறலாம்.

சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை (230)

சாதல் இனிது; எப்பொழுது?: ஈத்து உவந்து வந்தவன் இடையே, ஈய முடியாதபடி இடையூறு நேர்ந்தால், அது அவனுக்கு மிகப்பெரிய துன்பமாகும். அது மரண வேதனையிலும் கடுமையாய் உயிரை வதைத்து வருத்தும். இரப்பார்க்கு ஈய முடியாமல் இருக்கும், இது போன்ற சூழ்நிலையில், இருப்பதிலும் இறப்பதே இனிது என்று பேசுகிறார் வள்ளுவர். மனித வாழ்வின் புனித நிலை, மாசுபடாமல் காப்பாற்றப்படுகிறது என்பதை இக்குறள் வாயிலாக நுண்ணிதின் உணரலாம். துன்பமயமான சாதல், இன்ப மயமாக மாறும் ரசவாத வித்தை பெற்றுத் திகழும் இக்குறளில், முரணா தோன்றும். மூழ்கி முத்தெ டுத்த மகிழ்ச்சி அல்லவா தோன்றும்.

ஊதியம் இல்லை உயிர்க்கு (231). எந்த உயிர்க்கு?: வறுமையில்வாடி, தன்னிடம் பொருள் வேண்டி வந்து நிற்பாற்கு, கொடுத்து உதவ முடியாத நிலை ஏற்பட்டால், அந்த உயிருக்கு வாழ்வில்லை என்கிறது இக்குறள்.

எதையும் மேலெழுந்த வாரியாகப் பார்க்காமல் உன்னிப்பாகக் கவனித்து உற்று நோக்கும்பொழுது, இதில் முரண் இல்லை; மாறாக வள்ளுவரின் சொல்லாடலில் காணும் மகிழ்ச்சியின் எல்லையை தொட்டுக்காட்டும் இடம் என்பது புரியும்.

கெட்டான் எனப்படுதல் நன்று (கெட்டான்= இறந்துபட்டான்)} எப்பொழுது? : பகைமை கொண்டு அவமதிப்பார் பின் சென்று, மானங்கெட்டு வாழ்தலினும், அது கெடாமல் சாதல் நல்லது என்கிறது இக்குறள். அங்கு சாதல் மிகத் துன்பமானது என்று பேசிய வள்ளுவர் இங்கு சாதல் இனிது என்று பேசுவது, வாழ்வின் பன்முகத் தன்மையை குறிப்பதே அன்றி, முரண்பட்டுப் பேசுவது அன்று என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும். (109)

உள்ளம் துடிக்க உயிர் பதைக்க, கொலை அனைய கொடிய துயரங்களைச் செய்யினும் அவர் செய்த ஒரே ஒரு நன்மையை நினைத்துப் பார்த்தால் அவை யாவும் ஒன்றுமில்லாமல் போய்விடும் எனப்பேசுகிறது இக்குறள்.

அங்கு, சாவும் கொலையும் வேண்டாம் என்று விலக்கிப் பேசிய வள்ளுவர், இங்கு சாவையும் வாழ்வியலின் ஒரு பகுதியாக்கி. சமநிலைப்படுத்திக் காட்டுகிறார். தனிமனித அகச்செம்மை, இங்கு தலை தூக்கி நிற்கிறதே ஒழிய, முரண் என்னும் வேறுபாடு வீழ்ந்து, பொய்யாய்க் கனவாய்ப் போய்க் கிடப்பதைப் காணலாம்.

மேற்கண்ட இவற்றையெல்லாம் பார்க்கும் பொழுது, குறளில் முரண் என்று தோன்றும் மாயை, புறமுதுகிட்டு ஓடுவது தெரியும்.

இனி அடுத்த நகர்வுக்குச் செல்லலாம்.

(ஈ) வாய்மையா? கொல்லாமையா? சில புரிதல்கள்.

யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற. (300)

கொல்லாமை அதிகாரத்தின் இறுதிக் குறள் இது.

வாய்மையே எல்லா அறங்களிலும் மேன்மையானது; அதற்கு ஒப்பானது வேறு ஒன்றும் இல்லை எனச் சொல்லும் வள்ளுவ ஆசான், இக்கோட்பாட்டிற்குத் தன்னையே சாட்சியாக்கிக் காட்டியுள்ளார்.

வாய்மையின் தூய்மையையும் அது நல்கும் ஒப்பற்ற பயனையும் வாழ்வியலில் கண்டு துய்த்து, துய்த்த அந்த அனுபவத்தை, தன்னையே சாட்சியாக்கி, பட்டவர்த்தனமாக இக் குறள் மூலம் பறையறைந்து சொல்லி இன்புறுகிறார்.

(உ) பொய்யாமை பொய்யாமை ஆற்றின் :

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று. (297)

பொய்யாமை என்னும் அறத்தையே தவறாமல் கடைப்பிடித்து வந்தால், பிற அறச்செயல்கள் ஏதும் செய்யாத போதிலும் கூட, அது நன்மையைத் தரும். இக்குறளும் வாய்மையின் மேன்மையை மகுடமிட்டுக் காட்டுவதாகும். இது இருக்க.

கொல்லாமை அதிகாரத்திற்குள் சென்று துளாவி, அதில் முரண்பாடுகள் போலத் தோன்றும் பகுதியைப் பார்க்கலாம்.

ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று. (323)

(ஒப்பற்ற நல்லறம் என்பது, எந்த உயிரையும் கொல்லாமல் இருத்தலே ஆகும்; அதற்கு அடுத்ததாக நல்லறம் என்று கருதப்படுவது பொய்யாமையாகிய வாய்மை ஆகும்.)

இக் குறள் வாயிலாக இரண்டு அறங்கள் (புண்ணியங்கள்) எண்ணி உணர வந்துள்ளது. ஒன்று: கொல்லாமையாகிய அருள் நீர்மை. இரண்டு: பொய்யாமையாகிய வாய்மை, கொல்லாமை, பொய்யாமை எனும் இந்த இரண்டு அறங்களுள் எது சிறந்தது? எனும் ஐயப்பாடு நமக்குத் தோன்றுதல் நியாயமே. வாய்மையே எல்லா அறங்களிலும் மேலானது; (குறள் 300) அதனினும் நல்லது வேறு யாதும் இல்லை என, அதன் தலைமையைப் புகழ்ந்து போற்றிய வள்ளுவர், இங்கு அதன் நிலையைச் சிறிது தளர்த்தி, கொல்லாமைக்குத் தலைமை தந்து பேசியுள்ளார்.

இதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள சிறியதோர் எடுத்துக்காட்டு. ஒரு முரடன், பசுவைக் கொல்ல, கையில் கொலைவாளுடன் வெறிகொண்டு ஓடி வருகிறான். அது காட்டுப் பகுதியில் உள்ள ஒரு நல்லவரின் குடிசை வழியே ஓடி மறைந்து போனது. தொடர்ந்து வந்த அவன் பெரியவரை நோக்கி ‘இங்கே ஒரு மாடு ஓடி வந்ததே; அது எங்கே?’ என்று கேட்டான். கொலை நோக்கோடு வந்துள்ள அவன் நிலையை நோக்கிக் கண்டு தெளிந்த அவர், அப்படி மாடொன்றும் இப்பக்கம் வரவில்லை என உறுதியோடு சொன்னார். அவன் குழம்பிப் போய் திரும்பிச் சென்று விட்டான்.

பிற உயிர்க்கு நேர்ந்துள்ள துன்பத்தை நீக்கும் பொருட்டுச் சொல்லுகின்ற ஒரு சிறிய பொய், இங்கு மேன்மை பெறுவதைப் பார்க்கலாம்.

பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின். *(292)*

(குற்றமற்ற நன்மையை விளைவிக்கக் கூடுமானால் பொய்யான சொல்லும்கூட வாய்மை என்று கூறத்தக்க இடத்தைப் பெற்றுவிடும்)

இப் பொய்யில் இரண்டு புண்ணியங்கள் மருவியிருக்கின்றன. ஒன்று: அப்பசு துயரிலிருந்து விடுபட்டு சுகமாய் உயிர் வாழ்ந்தது. இரண்டு: அவன் கொலை பாதகனாய் மாறாமல் இருக்கத் துணை செய்தது.

இக்குறள், பொய்யாமை கொல்லாமைகளுக்கு இடையே ஏற்றத்தாழ்வு கற்பிக்க வந்ததன்று. பொய்மை, கொலையை நீக்கியருளத் தலைவணங்கி வருகிறது. அவ்வரவு, வேறுபட்டு விலகி நிற்காமல், வாய்மை, கொல்லாமையின் பின் உறவுரிமையாய்ச் சேர்ந்து வந்து நின்று இன்பம் பயக்கிறது.

இவற்றைப் புரிந்து கொண்டால் இதில் ஏற்றத்தாழ்வோ முரண்பாடோ இல்லை என்பதையும் இது முரண்பாடு போலத் தோன்றும் மெய்யுரை *(Paradox)* என்பதும் தெளிவுறும்.

வாழ்வியலை வெவ்வேறு கோணங்களிலிருந்து அணுகுபவர் வள்ளுவர். ஆதலால் ஒரு இடத்தில் சொன்னதற்கு மாறாக வேறொரு இடத்தில் சொல்வது போல் தோன்றும். ஆழ்ந்து பார்த்தால் அவை முரண்கள் அல்ல. அந்தந்தச் சூழலுக்கு ஏற்ப, சொல்லப்பட்ட உண்மைகள் என்பது தெரியவரும். இதை,, "சூழல் சார் அறம்" *(Contextual Ethics)* என்று அழைக்கலாம்.

(Contextual Ethics is an approach to moral philosophy, asserting that ethical judgements are fundamentally dependent on the specific circumstances, relationships, history and cultural settings in which an action occurs.)

2. அரிய பெரிய அதிசய நிதியும்- நிரம்பாத கொள்கலமும்

மகிழ்ச்சி என்பது புறப் பொருள்களிலிருந்து வருவதில்லை. உள்ளத்தின் உள்ளே மனக்குகையிலிருந்து தளும்பி வழிவது அது என்று சொல்லி, "அரிய பெரிய அதிசய நிதி" ஒன்றைக் காட்டுகிறார் வள்ளுவர். அதுதான் அவர் கூறும் "வேண்டாமை அன்ன விழுச்செல்வம்" என்பதாகும்.

உலகத்தில் மிகப்பெரிய செல்வம் எது என்றொரு கேள்வியைக் கேட்டால் அதற்கு பல்வேறு விடைகள் வந்து நம் முன் தோன்றும்.’செல்வம் என்பது சிந்தையின் நிறைவே’ என்றொரு வாசகம் நம் முன் வந்து நிற்கும். ‘செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்’ என்றும் ‘கேடில் விழுச்செல்வம் கல்வி’ என்றும் இன்னும் பல செல்வங்கள் இக் கேள்விக்கு விடையாக நம் முன் வந்து நிற்கும். இவற்றையெல்லாம் தாண்டி, ‘வேண்டாமை அன்ன விழுச்செல்வம்’ என்றொரு செல்வத்தைக் கொண்டு வந்து காட்டுகிறார்.

பொருளையும் பிறவற்றையும் ‘செல்வம்’ என்று உலகம் எண்ணி உள்ளதால், அதிலிருந்து வேறுபடுத்தி இதனை ‘வேண்டாமை அன்ன விழுச்செல்வம்’ என்று சொல்லி, முற்றிலும் மாறுபட்டதொரு செல்வத்தை இங்குக் கொண்டு வந்து நிறுத்துகிறார்.

போதும், இதற்கு மேல் எதுவும் வேண்டாம் என்கின்ற மன நிலை வந்து விடுமானால் அதுதான் மகிழ்ச்சியைத் தரத்தக்க உயர்ந்த செல்வம். அதற்கு ஈடாக நான் எதையும் கண்டதில்லை என்கிறார் வள்ளுவர்.

வேண்டாமை அன்ன விழுச்செல்வம்
ஈண்டில்லை யாண்டும் அஃதொப்பது இல்" (363)

(எதையும் வேண்டாம் என ஒதுக்கும் எண்ணமே மேன்மையான செல்வம். இதற்கு ஒப்பான செல்வம், இங்கும் வேறு எங்கும் இல்லை.)

'வேண்டாமை அன்ன விழுச்செல்வம்' எனும் இந்தச் செறிவு மிக்க, மகிழ்ச்சிக்கு வழிகாட்டும் தொடரை, நாம் அனைவரும் நெஞ்சத்தில் எழுதி வைத்துக் கொள்ள வேண்டும்.

{Continent is natural wealth, luxury is artificial poverty. (Socrates) மனநிறைவே இயற்கைப் பெருஞ்செல்வம். பொருள் ஆசை மருளைத் தரும் வறுமை.*}*

ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும். *(370)*

(ஒருபோதும் நிரம்பாத ஆசையைக் கைவிட்டால் அந்த நொடியிலேயே எப்பொழுதும் மாறாதிருக்கும் மகிழ்ச்சி வந்து சேரும்.)

'ஆரா இயற்கை அவா' - உலக இலக்கியங்களில் இதற்கு இணையான தொடர் எங்காவது இருக்குமா எனத் தெரியவில்லை.

ஆரா என்றால் நிரம்பாத என்று பொருள்.. கொட்டினால் ஏதேனும் ஒரு அளவில் அந்தக் கொள்கலம் நிரம்ப வேண்டும். ஆனால் எவ்வளவு கொட்டினாலும், கொட்டக் கொட்ட நிரம்பாத ஒரு கொள்கலம், ஆசை மட்டும் தான் எனப்பேசுகிறார் வள்ளுவர். விறகு ஏறஏறத் தீ மண்டி எரியும். பொருளும் போகமும் சேரச் சேர ஆசை மேலும் மேலும் ஓங்கி விரியும். 'ஆசைக்கோர் அளவில்லை' என்பார் தாயுமானவர். ஒருபோதும் நிறையாத ஆசையை ஒழிக்க வேண்டுமானால் எந்தப் பொருளையும் விரும்பாத மனநிலை வரவேண்டும். நிரம்பாத ஒரு பாத்திரத்தை கையில் வைத்துக் கொண்டு இருக்கலாமா? போட்டு உடைத்து விடுங்கள் என்கிறார். நிரம்பாத ஆசையை அறுத்து விட்டால் மாறிலா மகிழ்ச்சியுடன் வாழலாம் என்பதுதான் வள்ளுவர் வகுத்துச் சொல்லும் சிந்தனை.

3. **உள்ளம் இரங்கி உதவார் - கயவர்.**

மனித இனத்து மக்கள் - பல்வேறு மனப்பாங்கும் - பல்வேறு போக்கும் நோக்கும் உடையவர்கள். வாழ்வியலின் எதார்த்தப் போக்கை - மூலை முடுக்கு - இண்டை இடுக்குகளுக்குள் எல்லாம் ஊடுருவிச் சென்று நுழைந்து பார்த்து - நிலவரத்தை அறிந்து வைத்திருப்பவர் - வள்ளுவ ஆசான். தனிமனிதர்களின் உள்ளோட்டம் உணர்வோட்டங்களை நாடிபிடித்துப் பார்த்து- அதற்குத்தக வாழ்வியல் அணுகுமுறையை வகுத்துச் சொல்பவர் - அவர். யாருக்கு எந்த முறையில் சொன்னால் - அது அவர்களுக்குப் புரியுமோ - அவர்களுக்கு அந்த முறையில் சென்று உணர்த்துபவர். வன்முறையைக் கொண்டுதான் ஒரு சிலருக்குப் புரியவைக்க முடியும் என்னும் ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் - விதிவிலக்காக - சில நேரங்களில் அதையும் கையிலெடுக்க நேரிடும் - எனச் சொல்கிறார்.

ஈர்ங்கை விதிரார் கயவர், கொடிறுடைக்கும்
கூன்கையர் அல்லா தவர்க்கு. (1077)

உலோபமும் கருமித்தனமும் உடைய கீழோர் - பல் உதிரும்படி - கையை முறுக்கி - கன்னத்தில் ஓங்கி அடிப்பவர்களுக்கு அல்லாமல்- கழுவிய கையையும் கூட உதறார். ஐயா தருமம் என ஏந்திய கையராய் யாசித்துக் கேட்டவருக்கு - யாதும் இரங்கி ஈயார். அடே வையடா கீழே என்று நையப்புடைப்பதற்குக் கையை வளைத்து முறுக்கி ஓங்கி நிற்பவருக்கு - எல்லாவற்றையும் கொடுப்பர்.

சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ்." (078)

ஏழை எளிய மக்கள் வந்து கேட்டவுடனே மேன்மக்கள் இரக்கம் கொண்டு உதவுவார்கள். நெஞ்சில் ஈரமும் இரக்கமுமற்ற கீழோர் அப்படி உதவமாட்டார்கள். கொடிய முரடர்கள் வந்து கரும்பை ஆலையில் இட்டு நெருக்கிக் கசக்கிப் பிழிவதுபோல் வருத்தினால்தான் பயன்படுவர்.

மென்மைப் போக்கு- எல்லா நேரங்களுக்கும் - எல்லா இடங்களுக்கும் பொருந்தாது என்பதை நுட்பமாக அறிந்தவர் - வள்ளுவர். அந்த அறிவுப் புலத்தின் வடிகாலாக வந்தமைந்தவைதான் - மேற்கண்ட இரண்டு குறட்பாக்களும்.

கடல் அரிப்பும் - தடுக்கும் முறைகளும்

ச. சபாரத்தினம்
புவியியலாளர் – கோவை

கடலுக்கும் நிலத்துக்கும் இடைவிடாத தொடர்பு *(Interaction)* இருந்து கொண்டே இருக்கிறது. இதைக் கடலுக்கும் நிலத்துக்குமான தீராக்காதல் என்று சொல்வதா? கடல், நிலத்தின் மீது தொடுக்கும் போர் என்று சொல்வதா? எப்படியாகினும், இதன் விளைவுகள் தீவிரமானவைதான். கடலின் இந்தச் செயலினால் கடற்கரையில் மண் அரிப்பு, கடலோர பாறை முகடு *(Cliff)*களில் அலைகள் தாக்கிப் பாறைகள் அகற்றப்படுவதும், செதுக்கப்படுவதும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன.

இந்தக் கடல் அரிப்பை ***Sea Erosion*** என்று கூறுவர். இவ்வாறு தொடரும் கடல் அரிப்பினால் மேலே உள்ள மணல் பகுதிகள் அடித்துச் செல்லப்பட்டு, அடியில் உள்ள கடினப் பாறைகளும் தேய்மானத்துக்கு உள்ளாகின்றன. இது தேயுறுதல் *(Denudation)* எனப்படும். ஆற்றின் போக்கினிலே ஏற்படும் அரிப்புகளும் மிக உண்டு. எனினும், இக்கட்டுரையில் கடல் அரிப்புகளை மட்டும் காண்போம்.

கடலைப் பொறுத்தவரை, பூமியின் மேல் பலவிதமான செயல்பாடுகளை நிகழ்த்துகிறது. நிலப்பகுதி கடலால் ஆக்கிரமிக்கப்படும் போது அது "கடல் கோள்" என்று வழங்கப்படுகிறது. அதாவது, கடலால் கொள்ளப்படுவது. அதேபோல், கடலானது உள்வாங்கி வெகுதூரம் சென்று விடுவது "கடல் விலகல்" எனப்படும். கடல் கோள் ***Marine Transgression*** என்றும், கடல் விலகல் ***Marine Regression***

என்றும் கூறப்படும். "கடல் கோள்" என்பதற்கு பூம்புகாரையும், "கடல் விலகல்" என்பதற்கு அரியலூரையும் சிறந்த உதாரணமாகக் கொள்ளலாம்.

ஓதங்கள்

சூரியன் மற்றும் சந்திரனின் ஈர்ப்பு விசையால் கடல் மட்டத்தில் ஏற்படும் உயர்வு, தாழ்வுகள் கடல் ஓதங்கள் (Sea Tides) எனப்படும். இவை உயர் ஓதங்கள் (High Tides), தாழ் ஓதங்கள் (Low Tides) என்று இருவகைப்படும். இந்த ஓதங்களின் வலிமை ஓதசக்தி (Tidal Energy) எனப்படும். இந்தத் தகவல்கள் ஒரு பொதுவான அறிதலுக்காக மட்டும்.

சுனாமி

கடற்கரை என்பது ஒரு பொழுதுபோக்கு அம்சமாகவே நினைத்து வந்திருந்த நம் மக்களுக்கு, 2004 டிசம்பர் 26-ஆம் தேதி ஏற்பட்ட சுனாமிக்குப் பிறகு கடல், கடற்கரை ஆகியவற்றின் மீது ஒரு அச்சம் கலந்த பார்வை ஏற்பட்டது. சுனாமி என்பது என்றோ ஒரு நாள், பழைய தரவுகளின்படி நூற்றாண்டுக்கு ஓரிரண்டு முறை தமிழ்நாட்டில் நிகழ்ந்துள்ளது.

ஆனால், கடல் அரிப்பு என்பது ஒவ்வொரு நிமிடமும் தொடர்ச்சியாக உலகக் கடற்கரைப் பகுதிகளில் நடந்துகொண்டிருப்பதுதான். சிற்பி உளி கொண்டு செதுக்குவது போல, கடல் அலைகள் மணற்பரப்பையும் பாறைகளையும் செதுக்கிக் கொண்டே இருக்கின்றன.

சமவெளிகளைவிட, கடற்கரைப் பகுதிகளைவிட மலைமேல் உயரத்தில் இருக்கும் சமதளங்கள் பாதுகாப்பானவை என்ற உணர்விலேயே பல குடியிருப்பு நகரங்கள் மலைமேல் உருவாயின. உதாரணமாக, கிரேக்கப் பேரரசில் பல நகரங்கள் அவ்வாறே உருவாக்கப்பட்டன.

கடல் அரிப்புக்குப் பல காரணங்கள் இருந்தாலும், அதற்கு முக்கிய காரணம் கடல் அலைகளே. இவை எவ்வாறு உருவாகின்றன?

கடலின் மேற்பரப்பில் காற்று வீசுவதால் கடலலைகள் உருவாகின்றன. அப்படி உருவாகும் அலைகளில் **முகடு** என்ற உச்சிப் பகுதியும், **தாழி** என்ற தாழ்ந்த பகுதியும் உள்ளன. இரண்டு முகடுகள் (அல்லது தாழிகள்) இடையே உள்ள தூரம்

அலை நீளம் *(Wave Length)* எனப்படும். அதேபோல், அலையின் உயரம், அலையின் வேகம் *(Velocity)*, அலையின் காலம் *(Duration)* ஆகியவை அலையின் வலிமைக்குக் காரணங்களாக இருக்கின்றன. கடல் அலைகளில் இருவகை உண்டு. **உருவாக்கும் அலைகள்** *(Constructive Waves)*, **அரிக்கும் அலைகள்** *(Destructive Waves)*.

முதல் வகையான உருவாக்கும் அலைகள் மிகவும் குறைவு. இவை கடலிலிருந்து கரையை அடையும்போது தன் பலம் முழுவதும் இழந்து, மணற்படிவுகளைப் பரவலாகப் படிய வைக்கின்றன. இதனால் கடற்கரை உருவாக்கம் பெறுகிறது.

அரிக்கும் அலைகள் குறுகிய அலை நீளமும், அதிக எண்ணிக்கையும் கொண்டவை. இவை அதிக வலுவுடன் கடற்கரையைத் தாக்கி, அரித்துக் கடற்கரைப் பகுதிகளைத் தம்முடன் கொண்டு சென்று கடலில் சேர்க்கின்றன.

கடல் அலைகள் மோதி மோதிப் பாறைகள் உடைகின்றன. பாறை விரிசல்களிலும் நீர் புகுந்து பாறைகளை அரிக்கிறது. பாறைகளில் உள்ள கரையக்கூடிய பொருட்கள் கடல் நீரில் கரைந்து *(Solution)* போகின்றன. பாறைத் துகள்களும், அலைகள் சுமந்து வந்த மணல் துகள்களும் உரசி உரசி *(Attrition)* மேலும் தூளாகின்றன.

ஒட்டுமொத்த நிகழ்வாக, கடல் அலையின் அரிப்பு செயல்கள் கடற்கரைப் பகுதிகளில் மிகுந்த தீய விளைவுகளை உண்டாக்குகின்றன.

கடல் அரிப்பைத் தடுத்தல்

இது மிகவும் தீவிரமாக யோசித்து வழிமுறைகள் காண வேண்டிய விஷயமாகும். இதை நம் வாழ்நாளிலேயே உணர நிறைய வாய்ப்புகள் கிடைத்திருக்கின்றன. பூம்புகாரில் கண்ணகி சிலையும் இலஞ்சி மன்றமும் சென்று பார்த்தவர்களுக்குத் தெரியும். சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலையும் தற்போதைய நிலையும் எவ்வாறு மாறியுள்ளன என்பதை அவர்கள் உணர முடியும்.

கடல் அரிப்பைத் தடுக்க, கடினப் பாறைகளையும் கற்களையும் கொண்டு நீண்ட சுவர் (Sea Walls) எழுப்பி, அலைகளின் தாக்கத்தை மட்டுப்படுத்தலாம். புதுவை கடற்கரையில் தடுப்புச் சுவருக்கும் அப்பால் ஏராளமான கடினமான கருங்கற் பாறைகளைக் கொட்டி வைத்திருப்பார்கள். இந்த அமைப்பு கரைப்பகுதி அரிக்கப்படுவதிலிருந்து பாதுகாக்கிறது.

(Tetrapods) டெட்ராபோட்ஸ் – இந்த வார்த்தை விலங்கியல் துறையில் நான்கு கால் கொண்ட உயிரினங்களைக் குறிக்கப் பயன்படுகிறது. இங்கே, கடல் அரிப்புத் தடுப்பு குறித்த செய்தியில், டெட்ராபோட்ஸ் என்பது கான்கிரீட்டினால் தயாரிக்கப்பட்ட, நான்கு கால்களைப் போன்ற அமைப்புகளைக் கொண்ட கட்டமைப்புகளாகும். இவற்றை நெருக்கமாக ஒன்றோடு ஒன்று பொருந்துமாறு கொட்டி வைத்தால், இவற்றின் மீது அலைகள் மோதி, அலைகள் தங்கள் வேகத்தையும் சக்தியையும் இழந்து போகின்றன. இதனால் நில அரிப்பு தடுக்கப்படுகிறது.

இதேபோல் **(Groynes)** கிராயின்ஸ் என்றும், நடுகற்கள் அல்லது கான்கிரீட் அமைப்புகள் அலைகளைத் தடுத்து திசைமாற்றம் செய்கின்றன. ஏற்கனவே கடல் அரிப்பால் பாதிக்கப்பட்ட இடத்தை வேறு இடங்களில் இருந்து மணல் கொண்டு வந்து பரப்பிச் சமாளிக்கலாம். மணல் நிரப்பப்பட்ட மணல் மூட்டைகள் (Sandbags) அடுக்கி வைத்தாலும் அவையும் கடல் அரிப்பைக் கட்டுப்படுத்தும். இதேபோல், தேவைப்படும் இடங்களில் காற்றுத் தடுப்புச் சுவர் எழுப்பலாம். இந்தச் சுவர்கள் வேகமான காற்றினால் மணல் அடித்துச் செல்வதைத் தடுக்கும்.

மேற்கூறியவை எல்லாமே செயற்கையான கட்டமைப்பு முறைகளாகும். இதுபோல், இயற்கையான முறைகள் சிலவற்றினாலும் கடற்கரை மண் அரிப்பைத் தடுக்கலாம்.

கடற்கரையில் தாவரங்கள் நடுதல் இதற்கு சிறந்த உதாரணம். பனை மரங்கள் வளர்த்தல், கடல் அரிப்பைத் தடுக்கும். அவற்றின் வேர்கள் மண் அரிப்பைத் தடுத்து நிற்கும்.

இதேபோல், இயற்கையாக அமைந்துள்ள உப்பங்கழிகள் *(Backwaters)*, சுனாமி போன்ற பேரலைகள் கடற்கரை வாழ்விடங்களை அழியாமல் அரணாகப் பாதுகாக்கின்றன. மாங்குரோவ்ஸ் *(Mangroves)* என்னும் சதுப்பு நிலத்தில் விளையும் தாவரங்களும் கடல் அரிப்பிலிருந்து பாதுகாத்து நிற்கின்றன. இவை **அலையாத்திக் காடுகள்** எனப்படும்.

ஆங்கிலத்தில் ஒரு ***"Saying"*** உண்டு.

> **"The water and rock confronts.**
> **Water always wins;**
> **Not because of strength,**
> **But due to its consistency."**

இதன் பொருள்: **பாறைகளும் நீரும் மோதிக்கொண்டால் எப்போதும் நீரே வெல்லும். அது வலிமையினால் அல்ல; விடாமுயற்சியின் காரணமாக.**

நீருக்கே அந்தத் தன்மை என்றால், மனிதர்களாகிய நாமும் விடாமுயற்சியுடன் கடல் அரிப்பைத் தடுக்க பலப்பல வழிகளைக் கண்டுகொண்டே இருப்போம்.

திருப்பாவையில் பெண் மொழி – ஓர் ஒப்பீட்டு ஆய்வு

முனைவர் சீதா இராமசுவாமி,
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை
புனித பிலோமினாள் கல்லூரி,
மைசூரு

பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒருவராகவும், நாச்சியாராகவும் பெரியாழ்வார் வளர்த்தெடுத்த மங்கையாகவும் கண்ணனையே தன் மனதால் உற்ற துணையாகவும் ஏற்றுக்கொண்ட ஆண்டாளைக் குறித்து எத்தனையோ முறைகள் ஆராய்ச்சி செய்யப்பட்டாலும் ஒவ்வொரு முறையும் இன்னும் மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டுகிறது. காரணங்கள் பல இருந்தாலும் சிலவற்றைக் குறித்து இக்கட்டுரை பயணம் செய்கிறது.

தமிழைப் பொறுத்தவரை ஆண்டாளின் பாடல் மிகவும் முற்போக்கானது, மேம்பட்டது. சமத்துவம் மற்றும், தத்துவத்தை ஒவ்வொரு பாடலிலும் கொண்டது. பெண்ணால் பாடப்பட்டது என்பதால் பெண் மொழி அதிகம். மேலும் கண்ணனின் மீது தீராக் காதல் வயப்பட்டக் காரணத்தாலோ என்னவோ அதன் மொழிக் கூறுகளும் அதிகம் பாரதியும் பெண்ணைப்போல் பாடியிருக்கிறார்.

கண்ணன்- என் காதலன் என்ற தலைப்பில் காதல் ரசம் சொட்டச் சொட்டப் பாடியிருக்கிறார்:

*வேண்டும் பொருளையெல்லாம் – மனது
வெறுத்து விட்டதடி..
தாயினைக் கண்டாலும் – சகியே
சலிப்பு வந்ததடீ.!
உணவு செல்லவில்லை- சகியே
உறக்கங் கொள்ளவில்லை…
பாலும் கசந்ததடி- சகியே
படுக்கை நொந்ததடீ….!
நாலு வயித்தியரும்- இனிமேல் நம்புதற் கில்லையென்றார்
பாலத்து சோசியனும் – கிரகம்
படுத்து மென்று விட்டான்!*

.... கனவு கண்டதிலே ஒருநாள்
கண்ணுக்குத் தோன்றாமல்
இனம் விளங்கவில்லை – எவனோ
என்னகம் தொட்டு விட்டான்.!.
எண்ணி யெண்ணிப் பார்த்தேன்..
கண்ணன் திருவுருவம் அங்ஙனே
கண்ணின்முன் நின்றதடீ!
என்று பாடுகின்றார்.

ஆனால் இங்கே பாவைப் பாட்டாக, கண்ணனைத் தேடிச் செல்கின்ற காதலியாக, பக்தையாக ஆண்டாள் மிளிர்கிறாள். மேலும், காதல், பக்தி, இதைத் தாண்டி இறைவனுடன் இரண்டறக் கலத்தல் என்ற உணர்வினை மிகவும் சிறு வயதிலேயே, இளம் வயதிலேயே ஆண்டாள் கொண்டது ஆச்சர்யம்! இவள் வயது இளம் பெண்கள் எல்லோரும் மணல் வீடு கட்டி, மரப்பொம்மை விளையாட்டு விளையாடிக் களித்திருக்கும் வேளையில் கண்ணனின் மீது தீராக் காதல், பக்தி கொண்ட ஆண்டாளை நினைத்து நினைத்து வியக்கிறோம்! மேலும் அவளின் பக்திச் சொற்கள் ஒவ்வொன்றும் மிக ஆழமானது, அற்புதமானது, பல சொற்கள் மிகப் பெரிய கதையை, தத்துவத்தைக் கொண்டது என்பதைப் படிப்போர் உணர்வர். மேலும் ஆண்டாளுக்கு மிக அழகாகப் பாடத் தெரியும் என்று தோன்றுகிறது! அவள் எழுதிய பாடல்களை எத்தனை அழகாகப் பல பாடகர்கள் பாடியிருக்கிறார்கள்.

எவ்வளவு முறை பாடினாலும் கேட்டாலும் சலிப்பே தட்டாது. அழகிய சீர் வரிசையும், சொற் நேர்த்தியும், இன்னும் பக்தியை நம்மிடையே வளர்கின்றன. சில நேரங்களில் இப்பாடல்கள் நாமே ஆண்டாளாக மாறி கண்ணனிடம் கெஞ்சுகின்ற நிலையை நமக்குத் தந்து விடுகிறது, உாரணமாக, கறவைகள் பின் சென்று கானம் சேர்ந்துண்போம் என்னும் பாடல் மனதை அப்படியே கொள்ளை கொண்டு விடுகிறது எனலாம், சிற்றஞ்சிறு காலே என்ற பாடலில் நம்மை அறியாமலேயே இறைவனிடம் சரணாகதி செய்து விடுகிறோம்.!

இதில் என்ன வியப்பு என்றால் ஐந்து வயதிலேயே ஆண்டாள் சூடிக் கொடுத்த சுடர்க்கொடியாகிறாள். கிட்டத்தட்டப் பதினைந்து வயதில் இறைவனுடன் இரண்டறக் கலத்தல் என்பதாகிறது. இத்திருப்பாவையில் ஏராளமான ஆச்சர்யங்கள் நிறைந்திருக்கின்றன.

சிலவற்றைப் பார்ப்போம்:

க. அவள் பாடிய பாடலில் அமைந்துள்ள சொற்கள் மிகப் பிரமாதம். புதுமையான சொற்கள். உதாரணமாக

புள்ளும் சிலம்பின.. ஆனைச்சாத்தன் – கீச்சாங் குருவிகள்; சிற்றாதே பேசாதே-(உடம்பு அசையாமல் என்ற பொருள்) கற்றெருமை பால் சோர, நனைத்து இல்லம் சேறு ஆக்கும் ., போதர்கின்றேன், ஆயர் சிறுமியரோமுக்கு, துயில் எழ ஒட்டாய் காண், புள்ளின் வாய் கீண்டானை, போன்ற சொற்கள் புதுமையானவை. சில பாடல்கள் உரையாடல் முறையில் அமைந்துள்ளன. மிக அழகான வாக்குவாதத்தை பல பாடல்களில் பார்க்கலாம் ! கலித்தொகையில் உரையாடல் முறையில் அமைந்த பாடல்கள் ஏராளம்.! இங்கேயும் ஆண்டாளும் தன் பெண்மைக்கேற்ப உரையாடலை அமைத்திருக்கிறாள்.

1. *எங்களை முன்னம் முன்னம் எழுப்புவான் வாய் பேசும்!*
   நங்காய், எழுந்திராய், நாணாதாய் நாவுடையாய்!
2. *எல்லே இளங்கிளியே! சில்லென்று அழையேன்மின், நங்கைமீர்*
   போதர்கின்றேன்(487)
   வல்லை, உன் கட்டுரைகள், பண்டே உன் வாயறிதும் ,
   வல்லீர்கள் நீங்களே, நானேதான் ஆயிடுக(488)
3. *வாயில் காப்பானே, மணிக்கதவம் தாள் திறவாய் (489)*
   போன்றவை!

சொல்லப்போனால் உரையாடல்கள் மிகப் பிரமாதம்! ஏசுவது போல இருக்கும், ஆனால் அதற்குள்ளே கண்ணனுடைய லீலைகள் அடங்கியிருக்கும் அல்லது தத்துவக் கருத்துகள் பொதிந்திருக்கும்!

இரண்டாவது அதிசயம்! பெண்ணால் பாடப்பட்ட பாடல்தான்! ஆனால் ஓரிடத்தில் கூட பெண்ணின் மன வருத்தத்தை, துக்கம் அல்லது துயரத்தை வெளிப்படுத்தும் சொற்கள் இல்லை.

சாதாரணமாக ஒரு பெண்ணிடத்தில் ஒரு ஐந்து நிமிடம் பேசினாலே அவர்கள் வீட்டுக் கதைகள் அல்லது வருத்தம் , வேதனை என்பது வெளிப்பட்டு விடும். ஆனால் அப்படிப்பட்ட செய்திகள் எதுவும் முப்பது பாடல்களில் ஒரு சிறிதும் இல்லை. எல்லாமே யசோதையின் மகனைக் குறித்து காதல் வயப்பட்டு பாடிய பாடல்களாகத்தான் தெரிகிறது. அவனை எப்படி அடைவது, பிறப்பின்றி அவனே கதி இருப்பது என மிகத் தத்துவமாகப் போகிறது.

ஆண்டாள் தன்னை ஒரு செல்வ சீமாட்டியாக வைத்துக் கொண்டு பாடினாலும் இயற்கையாகவே சிறு பெண்களுக்கான செயல்கள் அனைத்தையும் கொண்டு பாடியிருக்கிறார். ஒரே ஒரு மாற்றம், சிறு பெண்கள் விடியற்காலையில் எழுவது கடினம். இங்கே ஊர் கூடிச் செல்கிறார்கள் சிறு பெண்கள்! அதுவும் குளிர் மிக்க காலையில், குளிர்ந்த நீரிலே நீராடச் செல்கிறார்கள்.

இனி ஆண்டாள் பாடல்களில் பெண் மொழிக்கானச் சொற்களைக் காணலாம்:

ஆண்பாற் புலவர்கள் தன்னைப் பெண்ணாக நினைத்துக் கொண்டு பாடுவது ஒரு வகை. ஆனால் ஆண்டாள் பெண் என்பது மட்டுமல்ல, மிக இள வயதிலேயே தன்னை இறைவனுடன் ஐக்கியப்படுத்திக் கொண்டுப் பாடியது மிக்க சிறப்பு. மேலும் தான் பெண் என்பதாலேயே பாடல்கள் முழுவதும் தன்னை மறந்துப் பாடினாலும் பெண்ணின் மன இயல் பாடலைத் தாண்டி மிக நன்றாகத் தெளிவாகிறது.

முதலாவது

தான் அன்பு கொண்டவனை எந்தப் பெண்ணும் விட்டுக் கொடுக்க மாட்டாள். மிக மிக உயர்த்திப் பேசுவாள். கணவன் என்றாலே மிக உயர்த்திப் பேசுவார்கள், காதலன் என்றால் கேட்கவே வேண்டாம். அவனின் ஒரு கண் இமைப்பிற்காகத் தவம் இருப்பர்கள். வாய் ஓயாமல் அவன் புகழையே பாடுவார்கள். ஆண்டாள் காதல் கொண்ட கண்ணன் எப்படிப்பட்டவன்?

முதல் பாடலிலேயே அவன் பெருமையை மிக அழகாகப் பேசுகிறாள்:

(நந்தகோபன் குமரன், யசோதையின் இளஞ்சிங்கம்,கதிர்மதியம் போல் முகத்தான் தவறு செய்தவர்களைத் தண்டிக்க கதிராகவும், நல்லவர்களைக் காக்க இளமதியைப் போன்றும் இருப்பவன். பேய் முலை நஞ்சுண்டவன், கள்ளத்தனமாக வந்த சகடாசுரனால் கொண்டு வரப்பட்ட வண்டியை காலால் ஓங்கி உதைத்தவன்., குதிரை வடிவில் வந்த அசுரனை அழித்தவன் (மாவாய் பிளந்தவன்) கம்சனின் மல்லர்களை அழித்தவன் பாம்புப் படுக்கையில் படுக்கின்றவன், முனிவர்களாலும் யோகிகளாலும் விரும்பப்படுகின்றவன், இராவணனை அழித்தவன். (இலங்கைக் கோமான்), புள்ளின் வாய் கிழித்தவன்.

இதைக் காட்டிலும் முகத்துக்கு நேராகவே கண்ணனைப் புகழ்ந்துப் பாடுவது காதலின் அல்லது பக்தியின் உச்சக்கட்டம்தான்:

“அன்று இவ்வுலகம் அளந்தாய்,
தென் இலங்கை செற்றாய்,
பொன்றச்சகடம் உதைத்தாய்,
குன்று குடையா எடுத்தாய்,
கஞ்சன் வயிற்றில் நெருப்பென்ன நின்ற நெடுமாலே !”

மேற்கண்ட வரிகளில்தான் எத்தனை புராணக் கதைகள்!,

ஆச்சரியம் என்னவென்றால் அதில் உள்ள செய்திகள் அனைத்தையும் மிகச் சிறு வயதிலேயே அறிந்துக் கொண்டு தக்க இடத்தில் அதைப் பயன்படுத்தியது அபாரம்தான்!

இரண்டாவது:

ஒரு செயல் செய்ய வேண்டுமென்றால் அதற்குத் தேவையான நியமம் கட்டுப்பாடுகளைக் காப்பதில் பெண்களுக்கு நிகர் கிடையாது – உருளு சேவை, மண் சோறு சாப்பிடுதல், விரதம் இருத்தல், அலகு குத்திக் கொள்ளுதல் எனப் பலவற்றை இன்றைக்கும் தயங்காது செய்பவர்கள் பெண்களாகத்தான் இருக்கிறார்கள். சொல்லப்போனால் முக்கால்வாசிப் பண்டிகைகள் பெண்களைக் கொண்டே அமைகின்றன. இங்கேயும் ஆண்டாள் தன் விரதப் போக்கினைக் கூறுகிறாள்:

நெய்யுண்ணோம், பாலுண்ணோம், நாட்காலே நீராடி, மையிட்டு எழுதோம், மலரிட்டு நாம் முடியோம், செய்யாதன செய்யோம், தீக்குறளைத் சென்றோதோம்,

ஐயமும் பிச்சையும் – (தகுதியுள்ள சான்றோர்களுக்கு தேவையறிந்து உதவி செய்தல்,) பிச்சை இடுதல் , போன்ற இவை அனைத்து செயல்களையும் மகிழ்ச்சியுடன் செய்வோம்.

•பெண்கள் மிக முக்கியமான ஆசைப்படும் பொருள்– கண்ணுக்கு மை தீட்டல், கூந்தல் நிறைய, பூக்கள். இவை அனைத்தையும் விரத காலத்தில் ஒருங்கே துறக்கிறார்கள். ஆயர் குடி என்பதனால் வெண்ணெய்க்கும் பாலுக்கும் குறை இருக்காது. இருந்தாலும் அதை நாங்கள் உண்ண மாட்டோம் என்கிறார்கள்.

• விரத நாளில் குழந்தைகளுக்கும் தன் கணவருக்கும் சமைப்பார்கள். ஆனால் அதில் ஒரு பருக்கை கூட அவர்கள் உண்ண மாட்டார்கள். மிக்க மன வலிமை அதிகம் பெண்களுக்கு.

• நெடுநல் வாடையில் கூட வாடை காரணமாக பெண்கள் வெகு சில பூக்களையே அணிந்துக் கொண்டர்கள் என்பதும் தேவி தலைவனைப் பிரிந்து இருப்பதால் தன்னை அலங்காரம் செய்துக் கொள்ளாமலே இருந்தாள் என்றும் பார்க்கிறோம்;

• முல்லைப் பாட்டில் தேவி தன்னை இழந்து கண்ணீருடன் அவனுக்காக காத்திருக்கிறாள்.

• சிலம்பில் பெண்கள் எல்லோரும் தேவியை அலங்காரம் செய்துக் கொள்ளும்படி பாடுகிறார்கள்.

மேற்கண்ட பாடல் பகுதிகளில் கணவனைப் பிரிந்து இருந்ததால் பெண்கள் தன்னை அலங்கரித்துக் கொள்வதைக் கைவிட்டனர் என்பது தெளிவாகிறது. திருமணம் ஆன பிறகு பெண்களுக்கு தனக்காக வேண்டுதல் என்பது குறையும் , ஆனால் தன் பிள்ளைகளுக்காக, கணவனுக்காக, மற்றும் ஊருக்காக வேண்டுதல் அதிகம் புரிவார்கள். இங்கே பாவை நோன்பு தனக்காகவும் ஊருக்காகவும் செய்யப்படுகிறது. என்ன சிறப்பு !

ஓங்கு உலகளந்த உத்தமன் பேர் பாடி, நோன்பு செய்வதனால் தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து ஓங்கு பெரும் செந்நெல் ஊடி கயல் உகள, வாங்ககக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள் என்று ஒரு நீண்ட தேவை இங்கு வெளிப்படுகிறது.

அறிவாற்றல் மிக்கவர்கள்

• பெண்களுக்கு குறைவான அறிவு என்று யார் சொன்னர்கள்?

மழை எப்படிப் பொழிகிறது என்பதை மிக அழகாக விளக்குகிறாள் ஆண்டாள்.

• ஆழி மழைக்கண்ணா!
ஆழியுள் புக்கு முகந்து கொடு ஆர்த்து ஏறி,
ஊழி முதல்வன் உருவம் போல் மெய் கறுத்து,
பாழியந் தோளுடைப் பற்பநாபன் கையில்
ஆழி போல் மின்னி, வலம்புரிபோல் நின்று அதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழை போல் (477) என்ற பாடல்

• கீழ்வானம் வெள்ளென்று, எருமை சிறு வீடு-மேய்வான் பரந்தன காண்

வீட்டிற்கு முன்னால் சிறு தோட்டம் இருக்கும். அதில் பனி விழுந்திருக்கும், அதை சாப்பிட்டால் பால் மிகுதியாகக் கறக்கும் என்பர். பனிப்புல் மேய விடுவது சிறு வீடு என்பர். பால் கறந்த பின்பு பிறகு வெளியே மேய விடுவார்கள்.

– அதை ஆண்டாள் மிகச் சரியாகத் தன் பாடலில் பயன்படுத்தி இருக்கிறார்.

உறக்கம் விரும்பிகள்

• பெண்களுக்கு உறக்கம் என்பது பிடிக்கும் அதுவும் குளிர் நிரம்பிய காலங்களில் போர்த்துக் கொன்டு தூங்குவது என்ன இனிமை! எவ்வளவு சுகம்..! மேலும் தோழியர்கள் சுற்றி சுற்றி வந்து' எழுந்திரு' என்று கூப்பிடக் கூப்பிட, கேளாமல் இருப்பது போல நடிப்பது இன்னும் சுகம் . சுகம்தான்!



நிறைய பாடல்கள் ஆண்டாளைத் துயில் எழுப்பும் விதமாக அமைகின்றன.

• பிள்ளாய் எழுந்திராய், பாவாய் எழுந்திராய்

• கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ? பள்ளிக் கிடத்தியோ?

• ஏமப் பெருந்துயில் மந்திரப்பட்டாளோ?

• மாமீர் அவளை எழுப்பீரோ? ஊமையோ, செவிடோ? அனந்தலோ (களைப்போ?)

• கும்பகர்ணன் கூட உனக்குத் தோற்று விட்டனோ? என்று போகிறது.

• சரி, இவளைத்தான் இவள் தோழிகள் எழுப்புகிறார்கள் என்று பார்த்தால் கதை வேறு திசைக்குச் செல்கிறது.

பெண்கள் அனைவரும் ஆண்டாளுடன் கோவிலுக்குச் செல்லத் துணிகிறார்கள். அங்கே வாயில் காப்போன் இருக்கின்றான். அவனிடத்தில் கெஞ்சுகிறார்கள். மாயன் மணிவண்ணன் நென்னலே வாய் நேர்ந்தான், (அவன் சொல்லி விட்டான், வார்த்தை தவற மாட்டான். ஆகையால் நாங்கள் நீராடி தூயவர்களாக வந்து நிற்கிறோம்,)

ஆகையால் கோயில் காப்பவனே தாள் திறவாய்

கொடிதோன்றும் தோரண வாயில் காப்பவனே மணிக்கதவம் தாள் திறவாய்,-◊

(இணைக்கதவமாக இருக்கும் இருகதவு) –

நேய நிலைக் கதவம் நீக்கேலோர் எம்பாவாய் என்று வேண்டுகிறார்கள்.

மேலும் இப்பெண்களுக்கு அவர்கள் பெயர் தெரியாதலால் அவர்கள் செய்யும் தொழில் வைத்து அவர்களை அழைக்கிறார்கள். இன்றும் நாம் பூ அல்லது பழம் விற்றுச் செல்பவர்களை ஏ ! பூ அல்லது ஏ! பழம் என்றுதானே அழைக்கிறோம். தையல்காரர், கண்டக்டர், டிரைவர் போலிஸ் செக்யூரிட்டி என்றுதானே அழைக்கிறோம். அது போல அவர்களையும் அவர்கள் தொழிற்பெயர் கொண்டே அழைக்கிறார்கள்

துயில் எழுப்புவது யார் யாரை?

• வளர்ப்புத் தந்தையாகிய நந்த கோபன் , தாய், அண்ணன், தம்பி!

• எம்பெருமான் நந்த கோபாலா எழுந்திராய்

• யசோதா அறிவுறாய் !

• ஓங்கி உலகு அளந்த உம்பர் கோமானே !– தேவர்களின் தலைவன்

• செம்பொற் கழலடிச் செல்வா பலதேவா! உம்பியும் நீயும் * உறங்கேலோர் எம்பாவாய்- !(உன் தம்பியாகிய கண்ணன், அண்ணனாகிய நீ- பலதேவன்)

• அடுத்தபடியாக நந்த கோபனின் மருமகள் – (நப்பின்னை)-

கடை திறவாய்- செந்தாமரைக்கையால் சீரார் வளை ஒலிப்ப வந்து திறவாய் மகிழ்ந்தேலோர் எம்பாவாய்! என்கிறாள்.

என்னைப் பொறுத்த வரை இதில் சொல்லப்படுபவர்கள் ஐவர். இந்த ஐவரும் நம்முடைய ஐந்து புலன்களோ? ஐந்து புலன்களையும் அடக்கி, இதோ பார்! இந்த பிறவியின் பயன், இறைவனுடன் ஒன்று கலத்தல்தான். ஆகையால் நீங்கள் அனைவரும் அடங்கியிருக்க வேண்டும். இறைவன் நாமத்தால் மனம் முழுவதும் ஐம்புலனும் இணைந்து அவன் புகழை இசைத்திடஎழுங்கள். பழைய குப்பையிலிருந்து, மன விகாரத்திலிருந்து விடுபட்டு புதிய அறிவு, புதிய ஞானம் பெற எழுந்திருங்கள் என்பதாக இருக்குமோ?

• பெண்கள் வீட்டு நிர்வாகம் செய்வதில் சிறந்தவர்கள்:

ஆய்ச்சியர் மத்தினால் ஓசைபடுத்த தயிர் அரவம் கேட்டிலையோ? என்ற பாடல் வரி பெண்களின் அன்றாடத் தொழிலை விளக்குகிறது.

செல்லப் பிராணிகள்

தனக்குத் துணையாக செல்லப்பிராணிகளை வளர்ப்பது அவர்களுக்கு மிகவும் பிடிக்கும்: ஆண்டாளின் கையில் செல்லப்பிராணியாக கிளி இருக்கிறது.

• காதல் பாஷை பேசுவதில் கிளி பெயர் பெற்றது.

• சொன்னதைத் திருப்பிச் சொல்லும் கிளி. –

• காதல் தூதுவன்

• மேலும் மன்மதனின் வாகனம்.

• திருவில்லிப்புத்தூரில் கிளியை பல பூக்களால் அலங்காரம் செய்து வைப்பார்களாம்.அதற்கு கல்யாணக் கிளி என்று பெயர் என நூல்கள் தெரிவிக்கின்றன

• எல்லே இளங்கிளியே என்னும் பாடலில் ஆண்டாளைப் பெண்கள் கிளி என்றுதான் சிறப்பிக்கிறார்கள்.

• கிளியைக் குறித்து ஒரு கதை மிக சுவாரஸ்யமாகப் பேசப்படுகிறது:

சுகப்பிரம்ம ரிஷி (வேத வியாசரின் மகன்) கிளி போன்ற முகத்துடன் பிறந்ததால் (சுகா – என்பது சம்ஸ்கிருதத்தில் கிளி அதனால் சுகப்பிரம்மன் என்ற பெயர்) – இவர்தான் நாச்சியாரின் தூதராக கிளி வடிவில் சென்று தெய்வீகத் திருமணம் நடத்த உதவி புரிந்தார், ஆண்டாளின் தூதுப் பணியை சிறப்பாகச் செய்து முடித்தப்பின் ஆண்டாள் அவருக்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்க, ஆண்டாளின் கரத்தில் கிளியாக இருக்க ஆசை என்று அவர் கூறியதாக மகாபாரதக் கதை கூறுகிறது

இன்றும் திருவில்லிப்புத்தூரில் மாதுளம் பூ மூக்கு, மரவல்லி இலையில் உடல் என செய்து ஆண்டாளுடைய கையில் வைக்கப்படுகிறது.

வாயாடி

• பெண்கள் வாயாடுவதில் பெயர் பெற்றவர்கள், எதிர்வாதம் செய்வார்கள், வம்பு செய்வார்கள், பிடிவாதம் பிடிப்பார்கள். ஓயாமல் பேசிக்கொண்டே இருப்பார்கள்: செல்லப்பெண் என்றால் கேட்கவே வேண்டால், ஊராரும் தன்னைத் தாங்க வேண்டும் என்று அதிகமாக செயலில் இறங்குவார்கள்.

“எல்லே இலங்கிளியே” என்னும் பாடல் பெண்களின் வாய்ச் சவடாலுக்கு மிகச் சிறந்த உதாரணம்.

வசியத்தில் சிறந்தவர்கள்

தனக்கு ஒரு பொருள் தேவை அல்லது ஒருவர் தேவை என்றால், அவருடைய உறவினர் எல்லோரையும் வசியம் செய்வதில் பெண்கள் மிகக் கெட்டிக்காரரர்கள்:

உதாரணமாக, கண்ணனைத் காண்பதற்காக நந்த கோபனை புகழ்ந்து பாடுகிறார்கள், யசோதையையும் , பலதேவனையும் நப்பின்னையையும் அழைக்கிறார்கள் வேண்டுகிறார்கள். (அம்பரமே தண்ணீரே என்னும் பாடல்). நப்பின்னையை அவள் மனம் இளகும்படி, ஆண்டாள் மன்னிப்பு கேட்கின்ற பாடல்கள் நான்கைந்து தென்படுகின்றன. நப்பின்னையின் மனம் நோகக்கூடாது என்ற கருத்தில் இப்பாடல்கள் அமைந்ததுள்ளன.

போராட்டம், வாக்குவாதம், மன்னிப்பு

கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்றால் பெண்கள் அந்த ஏமாற்றத்தைத் தாங்க மாட்டார்கள். போராடி ஓரளவிற்காகவாவது வெற்றி பெறத் துடிப்பார்கள்.

ஆனால், தான் விரும்பிய பொருள் தனக்குக் கிடைக்கப் போகிறது என்று உணர்ந்து விட்டால், தான் செய்தத் தவறுக்கு சற்றும் தாமதிக்காது மன்னிப்பு கேட்டுக் கொள்வார்கள். அதில் அவர்களுக்கு நாணம் கிடையாது. சொல்லப்போனால் ஒரு விஷயத்திற்காகப் போராடுவார்கள், சண்டை போடுவார்கள், வாதம் செய்வார்கள்

மன்னிப்பும் கேட்பார்கள். இது அவர்களின் இயல்பு!

சிற்றம் சிறு காலே என்ற பாடலின் ஒவ்வொரு வரியும் மிகச் சிறப்பு

பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்து

நீ குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது....

எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்

உன்தன்னோடு உற்றோமே ஆவோம்

உனக்கே நாமாட்சி செய்வோம்.

மற்றை நம் காமங்கள் மாற்றேலோர் எம் பாவாய்!

அறிவொன்றும் இல்லாத ஆய்க்குலத்தில்

உன்தன்னைப் பிறவி பெறுந்தனைப்

புண்ணியம் யாமுடையோம்~

குறைவொன்றுமில்லாத கோவிந்தா!

உன்தன்னோடு உறவேல் நமக்கிங்கு

ஒழிக்க ஒழியாது! அறியாத பிள்ளைகளோம் (உ அ)

அன்பினால் உன் தன்னை சிறு பேர்

அழைத்தளவும் சீறி அருளாதே

இறைவா நீ தாராய் பறை

என்று மனம் உருகி ஆண்டாள் பாடுகிறாள். நாமும் நெகிழ்கிறோம்!

இந்த பாடல் மனதை அப்படியே நெகிழ வைக்கக்கூடியது. கண்களில் கண்ணீர் வந்து விடும்.

பற்றற்றவர்கள்

பெண்களுக்கு திருமணம் ஆனப் பிறகு துளியும் தன் உடல் மீது பற்று கிடையாது. அதி பயங்கரமான வேலை என்றாலும் இழுத்துப் போட்டுக் கொண்டுச் செய்வார்கள். அதே நேரத்தில் தான் செய்த செயலுக்கு பாராட்டு எதிர்பார்ப்பார்கள், கட்டாயம் பரிசும் கேட்பார்கள். கேட்கும் அந்த பரிசு அந்தந்த மனிதர்களின் தன்மையைப் பொறுத்து அமையும்: இங்கே ஆண்டாள் கண்ணனிடத்தில் கேட்பது பறை வேண்டும் என்பதாம் . இந்த வேண்டுகோள் முதல் பாடல் தொடங்கி கடைசி பாடல் வரை போகிறது.

• நாராயணனே நமக்கே பறை தருவான்,
• உன் சேவகமே ஏத்திப் பறை கொள்வான் இன்று யாம் வந்தோம்
• பறை தருதியாகில்
• உன்தன்னைப் பாடிப் பறை கொண்டு யாம் பெறும் சம்மானம்
• இறைவா நீ தாராய், பறை
• இற்றைப் பறை கொள்வான் அன்று காண் கோவிந்தா !

பறை என்பது என்ன? தன்னை இறைவன் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவனிடத்தில் சரணாகதி செய்கிறோம், மீண்டும் பிறப்பில்லாமல் செய்ய வேண்டும் என்பதுதான் அவர்களுடைய பறை என்பதன் பொருளான கோரிக்கை

பாராட்டும், பரிசும்

• பெண்கள் தன்னைப் பலர் முன்னிலையில் பாராட்ட வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள்.
தன்னை எல்லா நேரத்திலும் ஆதரிக்க வேண்டும் என்றும் விரும்புவார்கள்.
ஆனால் ஏறுமாறாக நடப்பர்கள். அதை இன்னொருவர் சொல்லிக் காட்டினால் வாதமும் புரிவார்கள்:
உதாரணமாக, எல்லே இலங்கிளியே என்னும் பாடலை வாய் விட்டு பலமுறை பாடிப் பாடி இரசிக்கலாம்;

கூட்டம்தான், கும்மாளம்தான்

தனிமை என்றால் பெண்களுக்கு பயம் ; பிடிக்காது, அவர்களுக்கு கூட்டம் வேண்டும். கூட்டம் என்றால் கொள்ளை ஆசை. தன் வயதுப் பெண்கள் என்றால் கேட்கவே வேண்டாம். ஏழு ஊர் என்றாலும் போதாது....! பாவை முப்பது பாடல்களும் பெண்கள் தன் வயதுப் பெண்களுடன் செய்யும் ஆர்ப்பாட்டம்தான், இதில் பக்தியும் உண்டு, வாயாடலும் உண்டு.



• பேய்ப்பெண்ணே என்று அதட்டுவார்கள்
• மாமீர் அவளை எழுப்பீரோ? என்று உரிமையுடன் போராடுவார்கள்.

•

உன் மகள்தான் ஊமையோ, அன்றி செவிடோ? அனந்தலோ?

• கூற்றத்தின் வாய் வீழ்ந்த கும்பகரணனும் தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ? என்று அதிசயிப்பார்கள். கேலி செய்வார்கள்.

• தன்னை மற்றவர்களுடன் ஒப்பிட்டுப் பேசினால் பெண்களுக்கு பிடிக்கவே பிடிக்காது. தான் தனி, அதுவும் சிறப்பான தனிப்பிறவி என்பதில் மிக ஆர்வம் காட்டுவார்கள்.

• தனக்குத் துன்பம் வந்தால் அதைத் தீர்க்க வேண்டும் எனப் பெண்கள் நினைப்பார்கள்.

• தன் விரதம் முடிந்து விட்டால் அவர்களின் கூத்து ஆர்ப்பாட்டம் அதிகம்தான்! தான் விரதம் இருந்ததற்காக அவர்கள் கேட்டு பெறும் சம்மானம் ..நினைத்துப் பார்க்கவே நெஞ்சம் இனிக்கிறது! அதுவும் தன் காதலனிடத்தில், தெய்வத்தினிடத்தில் என்றால் பட்டியல் மிகப் பெரியதாக வளருகிறது!

• . கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா என்ற பாடலில் மிகப் பெரிய பட்டியல் காணக் கிடக்கிறது!

• உன்தன்னைப் பாடிப் பறை கொண்டு யாம் பெறும் சம்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாக சூடகமே
தோள் வளையே தோடே செவிப்பூவே
பாடகமே என்றனைய பல்கலனும் யாம் அணிவோம்
ஆடை உடுப்போம் அதன் பின்னே
பாற்சோறு மூட நெய் பெய்து முழங்கை
வழி வார கூடியிருந்து குளிர்ந்தேலோர் எம்பவாய்

• போதுமா பட்டியல்!
கறவைகள் பின் சென்று கானம் சேர்ந்துண்போம்.. என்பதிலும் இந்தப் பட்டியல் நீள்கிறது.!

குற்றாலக் குறவஞ்சியில் வசந்தவல்லி பந்து ஆடும்போது அவள் அணிந்திருந்த நகைகளின் பட்டியல் மிகப் பெரியதுதான்.

குறத்தி போட்டிருந்த நகைகளும் அதிகம்தான். யானையின் கொம்பொடித்து வெம்பு தினை இடிப்பார்களாம்!

நினைவாற்றல் அதிகம்

கண்ணனுக்கே தான் செய்த செயல்கள் மறந்துப் போயிருக்கலாம் ஆண்டாள் எத்தனைப் பாடல்களில் அவன் செயலை மிக விளக்கமாகக் கூறுகிறாள் பாருங்கள். திருப்பாவையின் பல பாடல்களில் கண்ணனின் லீலைகள்தான் அதிகம் பேசப்படுகிறது.

• *Mood swing- மனநிலை மாற்றம் அல்லது ஊசலாட்டம் = இது சொல்லியே ஆகவேண்டும். பெண்களின் குணம் இது! பாரதி கண்ணன்- என் காதலன் என்ற பாடலில் இப்படிக் குறிப்பிடுவார்*

அப்பாடல் முப்பத்திரண்டு வரிகள் கொண்டவை! அதில் பல உணர்ச்சிகள் ஆட்டம் போடுகின்றன! முதலில் ஒரே கோபம், வருத்தம், வேதனை.. அதற்குப் பிறகு எல்லையற்ற மகிழ்ச்சி, இன்பம், ஆனந்தம்தான்.குணம் உறுதியில்லை- குழப்பம் வந்ததடீ.. என்று பாடியவள், கண்ணன் அவளைத் தொட்டு விட.. அப்படியே காட்சி மாறுகிறது..மனநிலை மாறுகிறது. உலகமே மிகப் பிரமாதமாகக் காட்சியளிக்கிறது.

உச்சி குளிர்ந்ததடீ சகியே உடம்பு நேராச்சு
மச்சிலும் வீடுமெல்லாம் முன்னைபோல்
மனத்துக் கொத்ததடீ
இச்சை பிறந்ததடீ- எதிலும் இன்பம் விளைந்ததடீ..
புதியதோர் சாந்தி பிறந்ததடீ

என்று தன் மன மகிழ்ச்சியை வெளிப்படுகிறாள் பாரதியின் கண்ணம்மா! ஆகையால் பெ ண்களுக்கு அடிக்கடி அவர்களுக்கு மன நிலை மாறும் (mood swing). அதனால்தான் திருப்பாவை பாடல்களை உற்று ஆராய்ந்தால் ஒரு பாடலில் கோபம், ஒரு பாடலில் குழைவு, ஒரு பாடலில் அதிகாரம், ஒரு பாடலில் மென்மை, கெஞ்சுதல் என பல உணர்ச்சிக் குவியல்கள் தென்படுகின்றன.

பொறுமை குறைவு ?

பெண்களுக்கு அவர்களைக் காக்க வைக்கக்கூடாது அது பிடிக்காது. அதனால்தான் கண்ணனை மிக வேகமாக அழைக்கிறார்கள். வாயிற்காப்போனையும் மற்றவர்களையும் எழுப்புகிறார்கள்.

ஒரு கருத்து :

• நென்னலே வாய்நேர்ந்தான் என்பது குறித்து ஆய்வாளர்கள் சிலர் வேறு விதமாகப் பொருள் கொள்வார்கள்: வாய் நேர்ந்தான் என்பதை வாக்கு கொடுத்திருக்கிறான் என்று கொள்வது சிறந்தது காரணம் அப்பாடலில் தொடர்ந்து வரும் வரிகளும் இக்கருத்தைத் தான் மெய்ப்பிக்கின்றன.

ஆண்டாள் பாடலின் உட்கிடக்கையாக அமைவது தன்னை கண்ணன் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதாம். மேலும் ஜீவாத்மா பரமாத்மாவுடன் இணையத் துடிப்பது. பிறப்பின்றி இறைவனுடனே கலந்திருப்பது என்பதுதான் இதனுடைய தாத்பரியம். இது மிக உயர்ந்த கொள்கை, வேண்டுதல், ஆசைப்படுதல். ஆங்கிலத்தில் இதை மெர்ஜிங் என்பார்கள். உறக்கம் என்பது ஜீவாத்மா பேராசைக் கடலில் மூழ்கி அதையே உண்மை என்று மயங்கிக் கிடப்பது,. திருப்பாவைப் பாடல்கள் சரணாகதி தத்துவத்தைத்தான் பேசுகிறது.

சரணாகதி என்றால் என்ன?

போரில் தோற்றவர்கள் அடி பணிவார்கள், கப்பம் கட்டுவார்கள்; இரண்டாயிரம் பகைவர்கள் தோற்று ஓட அவர்களைச் சிறை பிடித்தான் சேரன் என்று சிலம்பு கூறும், தசரதன் அரண்மனையில் கப்பம் கட்ட காத்துக் கிடக்கும் அரசர்களைப் பற்றி கம்பன் மிகப் பிரமாதமாக விவரிப்பார். இது ஒருவகை சரணாகதி. இன்னொரு சரணாகதி இறைவனின் ஆற்றலுக்கு சக்திக்கு பெருமைக்கு மயங்கி அவன் தன்னை ஆட்கொள்ள வேண்டுமென்ற பாவத்தில் அவன் கேட்குமுன்பே தன்னை அடிமையாகக் கொண்டு பாடுவது. திருப்பாவைப் பாடகளின் மூலமாக ஆண்டாள் கண்ணனின் விளையாட்டுகளில், வலிமையில், பெருமையில் மயங்கி தன்னையே அவனிடம் ஒப்படைத்து விடுகிறாள்.

அதனால்தான் கிங்கிணி வாய்ச் செய்த தாமரை பூப்போல் செங்கண் சிறுச்சிறிதே
எம்மேல் விழியாவோ?
அங்கண் இரண்டும் கொண்டு எங்கள் மேல் நோக்குதியேல் எங்கள்மேல் சாபம்
இழிந்தேலோர் எம்பாவாய் !
என்று தன் பாவனையை, உள்ளக்கிடக்கையை, இதுதான் நாங்கள் வேண்டி வந்தோம் என்று புலப்படப் பாடுகிறாள்.

இவர்கள் வேண்டுகோளை ஏற்று கண்ணனாகிய காதலன் வர வேண்டும் அவர்களைப் பார்க்க வேண்டும் சரி, ஆனால் அவன் எப்படி வர வேண்டுமாம் ? அதையேஆண்டாளும் கூறுகின்றாள். நாம் சிலிர்த்துப் போகிறோம்! மிக்க

முழக்கத்துடன் சிங்கம் கம்பீரமாக வருவது போல வர வேண்டும் எங்கள் குறைகளைக் கேட்க வேண்டும்.

• சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர் பொங்க எப்பாடும் பேர்ந்து உதறி,
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டு போதருமாப் போல ..
இங்ஙனே போந்தருள்

என்று கூறுவதில்தான் ஆண்டாளுக்கு எத்தனை ஆனந்தம்! நமக்கும் ஆனந்தம் பிறக்கிறது.

ஆண்டாள் தன் உள்ளக்கிடக்கையை மிக அற்புதமாகப் பாடி விட்டார். நாம்தான் அதில் இன்னும் மயங்கிக், கிறங்கிப் போய் இருக்கிறோம். கண்ணனும் ஆண்டாளும் எழுந்து வந்து நம்மை உய்விக்கும் வரை இந்த இனிய மதுவிலே மனம் மயங்கி இருப்போம் !

இன்முகம் காட்ட வேண்டும். ஆண்கலள் சமூகத்தில் ஆர்வம் காட்ட வேண்டும். அதிகம் சாதித்தால் பிடிக்கும்

ஒப்பீட்டு பேசுவது பிடிக்காது. சொல்லிக்காட்டினால் பிடிக்காது., பொய் பேசினால் பிடிக்காது, அதுவும் ஒரு ஆண் தன் காதலியிடத்தில் பொய் பேசினால் அவளுக்கு அறவே பிடிக்காது, அவள் மட்டும் பேசலாம் !

எமொஷனல் அதிக வலிமை , சீக்கிரம் முடிவு எடுப்பார்கள்

திருவள்ளுவர் பிறப்பும் இறப்பும்

முனைவர் சிவ இளங்கோ
புதுச்சேரி

அறங்கூறும் நூல்களுள் சிறந்ததாக 'முப்பால்' என்று மொழியப்படும் குறளை அதன் மதிப்பறிந்தோர் உயர்த்துகின்றனர். அப்பெருமை கருதி அடைமொழி தந்து அதனைத் திருக்குறள் என்றும், அதனை இயற்றிய வள்ளுவரைத் திருவள்ளுவர் என்றும் வழங்கி வருகின்றனர். தமிழ் மொழிக்கு வரி வடிவம் உருவான காலத்திற்குப் பின்னர் வள்ளுவர் வாழ்ந்தவர் என்பதால், குறள் எழுதப்பட்ட ஆவணமாகக் கிடைத்து இருக்கிறது. ஆனால் வள்ளுவரின் வாழ்வும், வாழ்க்கை நிகழ்வுகளும், வரலாறும் தொகுக்கப்பட்ட ஓர் ஆவணமாகக் கிடைக்கவில்லை. அங்கொன்றும், இங்கொன்றுமாகச் சில தனிப்பாடல்களும், திருவள்ளுவ மாலையும் சில வரலாற்றுக் குறிப்புகளைத் தருகின்றன. ஆனால் அவற்றில் நிறைய பாட மாறுபாடுகளும் காணப்படுகின்றன. திருவள்ளுவர் அல்லது திருக்குறளின் சமயம் எதுவென்று ஆய்வினை எடுத்துக் கொண்டால், அவருடைய பிறப்பில் இருந்து இறப்பு வரை உள்ள எல்லா நிகழ்வுகளும் சமயம் சார்ந்தே கற்பிக்கப்பட்டுள்ளதைக் காண முடிகிறது. இந்த நிலையில் ஒரு முழுமையான வரலாற்று ஆய்வுக்காக நாம் வள்ளுவர் எழுதிய திருக்குறளையேப் பெரிதும் சார்ந்து நிற்க வேண்டி உள்ளது.

வள்ளுவர் பிறப்பு

வள்ளுவரின் பிறப்பாகத் தமிழ்நாட்டின் மூன்று நிலப் பகுதிகள் குறிக்கப்படுகின்றன. மயிலாப்பூர் என்னும் திருமயிலை, வடமதுரை, குமரி மாவட்டம் ஆகியவை அவை. திருவள்ளுவர் சென்னையில் உள்ள மயிலாப்பூர் என்ற இடத்தில் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து அங்கேயே மறைவெய்தினார் என்பதைக் குறிக்கும் வகையில் தற்போது உள்ள சென்னை, மயிலாப்பூர் பகுதியில் ''மயிலைத் திருவள்ளுவர் கோயில்'' நிறுவப்பட்டு அது ஒரு கோயிலாகவே

பராமக்கப்பட்டு வருகிறது. அந்தக் கோயிலின் தர்மகர்த்தர்களால் திருவள்ளுவர் திருநாள் போன்ற விழாக்களும் கொண்டாடப்பட்டு வருகின்றன. இதுகுறித்த செய்திகள் படங்களுடன் சென்னை, திருவள்ளுவர் திருநாட் கழகம் *1935* ஆம் ஆண்டில் வெளியிட்ட திருவள்ளுவர் நினைவு மலரில், குறிக்கப்பட்டுள்ளன *(*பக்கம் *128).*

திருவள்ளுவ மாலையில் இடம்பெறும் நல்கூர் வேள்வியாரின் வெண்பாவில் மாமதுரை, புனற்கூடல் ஆகிய குறிப்புகளைக் கொண்டு *(*திருக்குறள் பரிமேலழகருரை *1967 : 515)* திருவள்ளுவர் பிறந்த இடம் மதுரை என்று கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. *(*திருவள்ளுவர் பிறந்தது, வாழ்ந்தது, மறைந்தது அனைத்தும் மதுரை என்ற கருத்தைப் பேராசிரியர் சோமசுந்தர பாரதி கூறுகிறார்). *"*வள்ளுவர் வரலாறு எது*?"* என்று அறியப் புலவர்கள் சென்னை, பச்சையப்பன் கல்லூரியில், உ. வே. சா. தலைமையில் கூடிய கூட்டத்தில் இக்கருத்து இறுதி செய்யப்பட்டதாகப் புலவர் கி. ஆ. பெ. விசுவநாதம் தெரிவித்துள்ளார் *(*தெளிதமிழ், ஆண்டு இல்லை, பக். *7-8).* **"மாதானுபங்கி மறுவில் புலச்செந்நாப் போதார் புனற்கூடற்கு அச்சு**" என்று முடியும் ஈற்றடியில் புனற்கூடம் என்பது மதுரை எனக் கூறியதை, மதுரை மாநகரில் வைகை ஆறு ஓடுகிறதே தவிர எங்கும் கூடவில்லை என்றும், புனல் கூடல் என்பது பழம்பெரும் ஆறான பழையாறும், முக்கடல் நீரும் ஒன்று கூடும் தென்குமரி என்று கொள்ளுவதே பொருத்தம் என்றும் குமரி மாவட்டத்துக்குக் குரல்கள் ஒலிக்கின்றன *(*எஸ்.பத்மநாபன் *2005 : 60).*

குமரி மாவட்டத்தின் கரை கண்டேசுவரர் ஆலயம் அருகில் முட்டம் என்ற சிற்றூர் அருகே, வள்ளுவ நாட்டின் ஒரு பகுதியான திருநாயனார்க் குறிச்சி என்னும் இடம் தான் வள்ளுவர் பிறந்த இடம் என்றும், திருவள்ளுவ நாயனாரைக் குறிக்கும் விதத்தில் திருநாயனார்க் குறிச்சி என்ற பெயர் நிலைத்திருப்பதாகவும் குமரி மாவட்ட ஆய்வாளர்கள் கூறுகின்றனர். கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் குமரிப்

பகுதிகளை ஆண்டு வந்த ஆய்குல மன்னர் கோக்கருந்தடக்கன் (கி.பி.857 - 885) காலத்துச் செப்பேடுகள் வள்ளுவ நாட்டுடன் தெங்கெழு நாடு, மிடால நாடு, படப்பா நாடு ஆகியவை இருந்ததெனக் குறிப்பிடுகின்றன. மன்னன் விக்கிரமாதித்திய வரகுணன் (கி.பி. 885-925) காலத்துச் செப்பேடுகள் வள்ளுவ நாட்டு மேற்கோடு பகுதிகளைக் குறிப்பிடுகின்றன. இராசராச சோழ மன்னர் (கி.பி. 985 -1014) காலத்தின் பதினெட்டாம ஆண்டில் வள்ளுவ நாட்டு முட்டம் பகுதியைப் போரில் பிடித்த பின்னர், அதற்கு மும்முடிச் சோழநல்லூர் என்று பெயரிட்ட செய்தி பேச்சிப் பாறை அணை, திருநந்திக் குடைவரைக் கோயில் கல்வெட்டில் காணக் கிடைக்கிறது (குமரியின் பழமையும் பெருமையும் 2019:28). மேலும் கருப்புக்கோட்டை, கைலாசநாதர் கோயிலில் உள்ள பனிரெண்டாம் நூற்றாண்டுக் கல்வெட்டிலும் வள்ளுவ நாட்டைப் பற்றிக் குறிக்கப்பட்டுள்ளது. குமரி மாவட்டத்தில் இன்றும் வள்ளுவ நாட்டு முட்டம், வள்ளுவ நாட்டு மேற்கோடு ஆகிய பெயர்கள் வழங்கி வருகின்றன (எஸ். பத்மநாபன் 2005:60).

தமிழ்நாடு அரசின் அரசிதழ் குறிப்பில், வள்ளுவர் குமரி மாவட்டத்தில் பிறந்தவர் என்று ஒரு தகவல் வெளியாகி உள்ளது. “கிறிஸ்தவர்களுக்கு விவிலியம் போன்று, தமிழர்களுக்கு உயர் அறநூலான திருக்குறளை இயற்றிய திருவள்ளுவர், கன்னியாகுமரி மாவட்டம் முட்டம் அருகே உள்ள திருநாயனார்க் குறிச்சியில் பிறந்தவர்” என்று தமிழ்நாடு அரசின் கன்னியாகுமரி மாவட்ட அரசிதழில் (பக்கம் 830) ஓர் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது (குமரியின் பழமையும் பெருமையும், 2019, பக். 27). மேலும் நீரை வெள்ளம் எனல் (குறள் 595), மடித்தற்று (குறள் 1032), தொடிப்புழுதி (குறள் 1037), தூண்டிற்பொன் (குறள் 931), பிணந்தழீஇயற்று (குறள் 931), போன்ற குறள்களில் பயின்று வந்துள்ள குமரி மாவட்டத்தின் பேச்சு வழக்கும், வாழ்வியல் முறைகளும் திருவள்ளுவரைக் குமரி மாவட்டத்தவராகச் சொந்தம் கொண்டாடும் முறையில் விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன (எஸ். பத்மநாபன், ஆய்வுக் களஞ்சியம், மார்ச், 2011, பக்கம் 3-10). இத்தனை வட்டார வழக்குச் சொற்களும், வழக்காறுகளும் திருக்குறளில் இடம் பெற்றிருப்பது ஆய்வுக்குரியதே.

அதேநேரம், “திருவள்ளுவ நாயனார் தந்தை கச்சனென்னும் அரயன் வடமதுரையை ஆண்ட அனுபவம் கொண்டு நாளது வரையில் அந்நாட்டைக்

கச்சயம் என்றும், கச்சம் என்றும் வழங்கி வருகிறார்கள்'' என்று இதே சாற்றுக்கவியை மேற்கோள் காட்டிப் பண்டிதர் அயோத்திதாசர் குறிப்பிடுகிறார். அவர் குறிப்பிடும் வடமதுரை இன்றைய திருவள்ளூரில் இருந்து ஊத்துக்கோட்டை போகும் பாதையில் ஆரணி ஆற்றுக்கு அருகில் உள்ளது. திருக்குறளை *1831* ஆம் ஆண்டில் பதிப்பித்த

விசாகப் பெருமாளையர், ''திருவள்ளுவர் தொண்டை நாட்டில் பிறந்தார்; அவர் பிறந்தது கூவ நகரம்'' என்றும் கூறுகிறார். அப்பகுதி திருவள்ளூர் மாவட்டம் கேசாவரம் அணைக்கட்டுக்கு அருகே உள்ள கூவம் என்னும் கிராமம். இக்கிராமத்தின் பெயராலேயே கூவம் ஆறு அழைக்கப்படுகிறது.

திருவள்ளுவரின் பிறப்பிடமாகக் கூறப்படும் இவ்விடங்களின் பின்னணியில், திருவள்ளுவரின் சமயம் குறித்த செய்திகள் பின்னப்பட்டுள்ளன. சென்னை, மயிலாப்பூர் கோவிலில் உள்ள திருவள்ளுவரின் உருவம் அவரைச் சைவராகவே காட்டும் வகையில் மிக வெளிப்படையாகச் சித்தரிக்கப்பட்டு இருக்கிறது. அவர் மதுரையில் பிறந்து, வாழ்ந்து, மறைந்தார் என்று திருவள்ளுவ மாலையில் உள்ள சாற்றுக்கவிகள் மூலம் சொல்லப்படும் செய்திகளும் அவரைச் சைவராகச் சித்தரிக்கும் பின்னணியைக் கொண்டுள்ளன. திருவள்ளுவர் வடமதுரையில் பிறந்தவர் என்னும் செய்தியும், அவர் அங்கேயே அறகத்தாக வாழ்ந்து மறைந்தார் என்ற செய்தியின் பின்னணியில் அவரைச் சமணராகவும், பௌத்தராகவும் நிறுவும் பின்னணி உள்ளது. திருவள்ளுவர் குமரியில் பிறந்தார் என்னும் குறிப்புகளில் நிறைய வரலாற்றுப் பின்னணிகளும், தகவல்களும் இருந்தாலும் மறைமுகமாக அவரைச் சைவராகக் குறிப்பிடும் நிலையும் அவ்வாய்வுகளில் ஆங்காங்கே குறிப்பிடப்படுகின்றன.

வள்ளுவர் அரச குலமா?

வட மதுரையை அரசாண்ட கச்சன் என்னும் அரசனுக்கு மகன் பிறந்து சகல கலைகளும் கற்றுத் தெளிவுற்று, பின்னர் முப்பால் நூலைத் தனது தந்தையாகிய கச்சன் என்னும் அரசனுக்கு வாசித்துக் காட்டி அவனை மனமகிழச் செய்தார், அவரே திருவள்ளுவர் என்று திருவள்ளுவ மாலையில் கீரந்தையார் எழுதிய சாற்றுக் கவியை முன்வைத்து, வள்ளுவர் அரச குலத்தினர் என்று கூறுகிறார் அயோத்திதாசப் பண்டிதர் (கௌதம சன்னா 2019:75-76).

வள்ளுவர் அரச பரம்பரையில் பிறந்தவர் என்று கருதலாம் என்று அறிஞர் சாமி. சிதம்பரனாரின் கூற்றும், வள்ளுவர்கள் சங்க காலத்தே குறுநில மன்னர்களாக இருந்தனர் என்று அவ்வை துரைசாமிப் பிள்ளையின் கூற்றும், திருவள்ளுவர் மன்னராக இருந்தார் என்ற கருத்தை வலியுறுத்துகின்றன (குமரியின் பழமையும் பெருமையும் 2019 : 28).

திருவள்ளுவர் ஒரு குறுநில மன்னர் என்றும், அவர் வள்ளுவ நாட்டை ஆட்சி செய்தவர் என்றும், இவ் வட்டாரத்தில் அரசனையும் தலைவனையும் நாயனார் என்று அழைக்கும் வழக்கம் உள்ளதையும் குமரி மாவட்ட ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இவ்வடிப்படையிலேயே வள்ளுவர் பிறந்த ஊர் திருநாயனார்க் குறிச்சி என்று பெயர் பெற்று உள்ளது. குமரி மாவட்டத்தின் கூவைக்காடு மலைப்பகுதியில் உள்ள ஒரு பெரிய கல் திட்டை வள்ளுவன் கல்பொற்றை என்றும், அதன் அருகில் உள்ள சிறிய கல்திட்டை வள்ளுவத்தி பொற்றை என்றும் அழைக்கப் படுவதைக் கன்னியாகுமரி வரலாற்றுப் பண்பாட்டு ஆய்வு மையம் தெரிவிக்கிறது. வள்ளுவ நாட்டை ஆண்டு வந்த திருவள்ளுவர் தனது மனைவியோடு கூவைக்காடு மலைக்கு வந்து தேனும், தினைமாவும் விரும்பி ஏற்றுக் கொண்டதை அங்கு வசிக்கும் காணியினப் பழங்குடி மக்கள் வாய்மொழி

வரலாறாக அளிக்கின்றனர். அவர் தங்கி இளைப்பாறிய இடமே வள்ளுவன் கல்பொற்றை என்று அழைக்கப்படுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

வள்ளுவன் கல்பொற்றையின் உச்சியில் வள்ளுவர் பாதம் பொறிக்கப்பட்டு வழிபாட்டுத் தலமாக இன்றும் திகழ்வதாகவும், அவ்வாறு மழை வேண்டிச் செண்டை மேளத்தோடு வள்ளுவன் பொற்றையின் உச்சிக்குச் சென்று, வள்ளுவர் பாதத்தில் கூவை இலையில் அவருக்குப் பிடித்த தேனும், தினைமாவும் படையலிட்டுக் குலவை ஒலிக்கும் வழக்கம் இன்றும் உள்ளதாகவும், அவ்வழக்கம் வள்ளுவன் கொடுதி என்று அழைக்கப்பட்டு வருவதாகவும் குமரி மாவட்ட ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர் (குமரியின் பழமையும் பெருமையும் 2019 : 34-35).

சங்க காலத்து நாஞ்சில் நாட்டைப் பொருநன் என்ற நாஞ்சில் வள்ளுவர் ஆண்டு வந்ததாக மருதன் இளநாகனார், அவ்வையார், கரூவூர்க் கதப்பிள்ளை போன்ற சங்ககாலப் புலவர்கள் போற்றிப் பாடியதாகக் குறிப்பிடப்படுகிறது. வள்ளுவர்கள் அரசரின் அறிவிப்புகளை மக்களுக்குத் தெரிவிக்கும் பணியினைச் செய்ததாக மணிமேகலையில் வள்ளுவர் பற்றிய குறிப்பு வருகிறது. அரசாங்க நடவடிக்கைகளில் மன்னருக்கு நெருக்கமாக வைத்து "மன்னர்க்கு உட்படு கருமத் தலைவர்" என்று திவாகர நிகண்டு கூறுகிறது (குமரியின் பழமையும் பெருமையும் 2019:29/திருக்குறள் பன்முக வாசிப்பு 2009:65-70). "செல்வச் சேனை வள்ளுவ முதுமகன்" என்று பெருங்கதை கூறுகிறது. வள்ளுவர் "யானை மீமிசை நன்பறை அறைந்தனர்" என்று கம்பராமாயணம் குறிப்பிடுகிறது. இவை, சங்க காலத்திற்குப் பிறகு வள்ளுவக் குடியினர் அரசரைச் சார்ந்தொழுகும் பெருங்குடி மக்களாக விளங்கினர் என்றும், சேர நாட்டுத் திருநாவாய்க் கோயில்களில் மகாமகத் திருவிழாவை நடத்தும் பணியினர் என்றும் குறிப்பிடப்படுகிறது. சோழ நாட்டில் அரசு ஆணைகளை மக்களுக்குத் தெரிவிக்கும் பணிகளைச் செய்தவர்கள் வள்ளுவர்கள் என்ற செய்தி இருக்கிறது. வள்ளுவர்களைத் "தென்னவர் வயமறவன்" என்று கரூவூர்க் கதப்பிள்ளையின் புறநானூற்றுப் பாடல் (380) கூறுகிறது. வள்ளுவர்கள் பாண்டி நாட்டின் படைத்தலைவர்களாகப் பணியாற்றிய செய்தியும் கிடைத்து தமிழ்நாட்டின் சேர, சோழ, பாண்டியர்களான மூவேந்தர்களோடு வள்ளுவர் வரலாறு இணைக்கப்பட்ட பல செய்திகள் முன்வைக்கப் படுகின்றன. வள்ளுவர்கள் கணியர்களாக அரச குலத்திற்கும், மக்களுக்கும் காலமுணர்த்திய செய்திகள், அவர்கள் முற்காலச் சமயங்களோடு

தொடர்புடையவர்கள் என்ற நிலைமையினைத் தெரிவிக்கின்றன (குமரியின் பழமையும் பெருமையும் 2019:30).

இதே கருத்தை, திருநெல்வேலிக்கு அருகே உள்ள ஒரு தேசத்தை நாளது வரையிலும் வள்ளுவர் நாடு என்று வழங்கி வருகின்றார்கள் என்று குறிப்பிடும் அயோத்திதாசப் பண்டிதர், அப்படி வழங்கப்படுபவர்கள் தென்னாட்டில் வந்து குடியேறியவர்கள் என்றும், இவர்கள் பூர்வம் வட தேசத்தில் கணித வல்லமையால் சாக்கையர் எனும் பெயர் பெற்றுக் கலிவாகு, வீரவாகு, இட்சுவாகு என்னும் சக்கரவர்த்திகளாகத், தார்வேந்தர்களாக விளங்கி வந்தனர் என்றும் குறிப்பிடுகிறார். இதை வடநாட்டில் தற்போதும் வழங்கும் சாக்கையர் தோப்பென்னும் நந்தவனத்தாலும், அங்குக் கற்பலகைகளில் அடித்திருக்கும் சிலா சாசனங்களாலும் சாக்கைய முனிவர் வரலாற்றைத் தெரிந்து கொள்ளலாம் என்றும் கூறுகிறார். இவர்கள் தென்னாட்டில் வந்து குடியேறிய போது சாக்கையர், வள்ளுவர், நிமித்திகர் என்னும் பெயரால் தன்ம, கன்மங்களை நிறைவேற்றி வந்தனர். இவர்களும் வள்ளுவர் என்று பெரும்பாலும் வழங்கி வந்தபடியால், இங்கும் திருநெல்வேலிக்கு அருகிலும் வள்ளுவன் நாடு என்று கூறும் வழக்கம் உண்டாயிற்று என்று அயோத்திதாசர் கூறுகிறார் (க. அயோத்திதாஸப் பண்டிதர் சிந்தனைகள், தொகுதி 3, பக்கம் 38 - 39, தலித் சாகித்ய அகாடமி, சென்னை, 1999).

வள்ளுவர் காலம்

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் வரிசையில் திருக்குறள் வைக்கப்படுவதால், அது சங்கம் மருவிய காலம் அதாவது கி.பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த காலமாகப் பலர் கருத்துரைத்துள்ளனர் (ஆர். விஸ்வநாத பாரதி, திருக்குறள் ஆராய்ச்சி, திருவள்ளுவர் வரலாறு 1926:43). அதே நேரம் சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் திருக்குறள் பற்றிய குறிப்புகள் காணக் கிடைக்கின்றன. சாத்தனார் தம் மணிமேகலையில் 'தெய்வம் தொழாஅள்' என்ற குறளை எடுத்துக்கூறி திருவள்ளுவரைப் பொய்யில் புலவன் எனச் சுட்டுகிறார். இவை இளங்கோவடிகள், சாத்தனார் ஆகியோர் காலத்துக்கு முற்பட்டவராகத் திருவள்ளுவரை நிறுத்துகின்றன. ஆலந்தூர் கிழார் பாடிய புறநானூற்றுச் செய்யுளொன்றில் எந்நன்றி கொன்றார்க்கும் என்று குறளின் கருத்தைத் தம் பாட்டுக்கேற்றபடி மாற்றி அமைத்துப் பாடிய திறனைக் கூறி

திருவள்ளுவர் கடைச்சங்க காலத்துக்கும் முற்பட்டவர் என்றும் ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. புறநானூறில் காக்கைபாடினியார் பாடிய "நரம்பெழுந்துலறிய" என்ற செய்யுளில் வரும் "ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தனளே" என்ற சொற்றொடர்க்கும் "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும்" என்ற வள்ளுவரின் சொற்றொடர்க்கும் பெரிதும் ஒற்றுமை உள்ளதைச் சில ஆய்வறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

காக்கைப் பாடினியார், ஆலந்தூர் கிழார் போன்ற புலவர்களின் காலத்திற்கு முற்பட்ட காலத்தில் திருவள்ளுவர் வாழ்ந்திருக்கக்கூடும். புத்தரின் கோட்பாடுகள் திருக்குறளில் காணப்படுவதால் திருவள்ளுவர், புத்தர் காலத்திற்குப் பிறப்பட்டுத் தோன்றி காக்கைப் பாடினியார் காலத்துக்கு முற்பட்டு வாழ்ந்தவர் என்றும், ஆகவே திருவள்ளுவர் காலம் கி. மு. மூன்றாம் நூற்றாண்டு எனக் கொள்ளலாம் என்றும் திருக்குறள் பரிமேலழகர் உரையில் ஆராய்ச்சி முன்னுரை எழுதிய திரு தூ. சு. கந்தசாமி கூறுகிறார் (திருக்குறள் பரிமேலழகர் உரை 1967:7-9).

திருவள்ளுவ நாயனார் வரலாறு என்னும் நூலில் பல அரிய செய்திகளை முன் வைக்கும் பண்டிதர் அயோத்திதாசர், திருவள்ளுவர் கடைச்சங்க காலத்தைச் சேர்ந்தவர் அல்ல என்று உறுதிபடக் கூறுகிறார். திருவள்ளுவர் மறைந்த இடமாகத் திருவள்ளூர் மாவட்டம், தின்னனூரைச் சுட்டிக்காட்டும் அவர் அங்கு இருந்த தின்னனூர் வியாரத்தில் தான் திருவள்ளுவர் மறைந்தார் என்று அவருக்குக் கிடைத்த ஓலைச்சுவடிப் பாடலைக் கொண்டு கூறுகிறார் (திருவள்ளுவ நாயனார் வரலாறு 1926:7-9). திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள தின்னனூர் வியாரம், அசோக மாமன்னர் காலத்தைச் சேர்ந்தது என்று கூறும் அயோத்திதாசர், அதனால் அசோகரின் காலமான கி.மு. மூன்றாம் நூற்றாண்டுதான் திருவள்ளுவர் வாழ்ந்த காலம் என்று அறுதியிட்டுக் கூறுகிறார் (கௌதம சன்னா 2019:85-90).

திருவள்ளுவர், வடமதுரையை அரசாண்ட கச்சன் என்னும் அரசனுக்கு மகனாய்ப் பிறந்து, சகல கலைகளும் கற்றுத் தெளிவுற்று, உள்விழிப் பார்வையின் (ஞானக்கண்) வழி ஞான விசாரணை செய்து தின்னனூருக்கு அருகே உள்ள இராகுல வியாரத்தில் (பௌத்த விகாரை) தங்கி, தனது அரசாங்கப் பரம்பரையில் நிகழ்ந்து வந்த புத்த, தன்ம அரச நீதிகளையும், அரண்களையும், அமைச்சர் விதிகளையும் தெள்ளற விளக்கி வந்தார். ஒழுக்கம், சீலம், ஞானம் இவைகளை விளக்கிப் பாயிரமாகும் பத்துப் பாடலிலும், புத்தபிரானாகும் ஆதியங் கடவுளை வாழ்த்தி, அவரால் ஓதி உள்ள தன்ம பீடம், சூத்திரப் பீடம், வினயபீடம் ஆகிய 1330 அருட் குறளால் அறத்துப்பால், பொருட்பால், காமப்பால் என வகுத்தெழுதித் தனது தந்தையும், அரசருமாகிய வடமதுரைக் கச்சனுக்கு வாசித்துக் காட்டினார். பின்னர் அதே அறவோர் பள்ளியில் அரகத்து நிலை அடைந்த திருவள்ளுவர், சில நாட்கள் சென்று சித்திரை சதுர்த்தசி பின்னாள் அமாவாசையில் நிருவாண திசையடைந்தார். அதனால் புத்த சங்க சங்கத்தாரும், குடிமக்களும் திருவள்ளுவர் தேகத்தை தகனம் செய்து, தாது கூபத்தை அதே அறப்பள்ளி மத்தியில் அடக்கம் செய்தனர். சில காலங்களுக்குப் பின்னர் வியார (விகாரை) மாறுதலால், இவ்வரலாறைப் பஞ்சரத்தினப் பாவில் கல்வெட்டாக வடித்து அவ்விடம் நாட்டியதாகவும் அயோத்திதாசர் குறிப்பிடுகிறார். இவர் குறிப்பிடும் இடம் இன்றைய திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள வீரராகவர் ஆலயம் (பெருமாள் கோயில்) ஆகும். இது இதற்கு முன்பு இந்திர வியாரம் (விகாரை) என்றும் இராகுலர் வியாரம் என்றும் வழங்கி வந்தது. இந்நாட்களில் இராகுலர் என்ற பெயர் இராகவர் என்று மாற்றப்பட்டு, வீரராகவர் கோவிலாக ஆக்கப்பட்ட செய்திகளை, நேரில் சென்று விசாரித்து ஓலைச்சுவடியினுடைய பாடலையும் சேர்த்து அயோத்திதாசர் மேற்குறிப்பிட்ட நூலில் விரிவாக விளக்கியுள்ளார்.

இதற்குப் பிறகும் திருவள்ளுவர் பிறந்து, வாழ்ந்து, மறைந்த செய்திகளையும் சேர்த்து அந்தந்தக் காலத்தில் திருவள்ளுவரின் வரலாறாக வெளியிடப்பட்டு வருகின்றன. மேற்கூறிய வரலாற்றுச் செய்திகளைத் திருவள்ளுவர் குறித்த ஆய்வாளர்கள் இன்னும் நுணுகி ஆராய்ந்து, உண்மையை வெளிக் கொணர்தலே, திருவள்ளுவர் குறித்த சர்ச்சைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க ஏதுவாகும்.

புத்தரின் மரகத ராட்சஸக் கும்பா
(Buddha’s bowl)

முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி, மதுரை
மொழிபெயர்ப்பாளர், பதிப்பாளர், இதழாசிரியர்

புத்தரின் கும்பா - பெயர்க் காரணம்

கௌதம புத்தர் தன் கையில் வைத்திருந்த உண்கலம் / கும்பா மிகப்பெரியது. இந்தக் கும்பா குறித்து சீன யாத்திரிகர்கள் ஃபாஹியானும் யுவான் சுவாங்கும் மற்றும் பிரிட்டனைச் சேர்ந்த தொல்லியலார் அலெக்சாண்டர் கனிங்காமும் தங்களது பயணக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளனர். புத்த சமயத் துறவிகள் வீடு வீடாகச் சென்று பிச்சை எடுக்கும் போது ஒவ்வொரு வீட்டில் தரும் உணவையும் தனது பிச்சை பாத்திரத்தில் ஒவ்வொரு பக்கமாக ஒதுக்கி வைத்துக் கொண்டு வருவர். விளிம்பற்ற பள்ளமான மண் சட்டியே/ கலயமே கொண்டு செல்வர். அந்தக் கலயம் பல வகை உணவு பொருட்களுடன் பார்க்க வண்ணமயமாகக் காட்சியளிக்கும். எனவே அந்த Buddha’s bowl என்ற சொல்லை இன்று ஒரு உணவுக் கோட்பாடாகக் கொண்டு அழைக்கின்றனர்.

பசியும் பிணியும்

பௌத்த துறவிகள் பெரும்பாலும் மண்ணால் ஆகிய பிச்சைப்பாத்திரத்தை ஏந்தி வீடு வீடாக வந்து பிச்சை எடுத்து உண்டனர். கனிமத்தால் ஆன பாத்திரங்களையே தட்டு, கிண்ணம், கும்பா என்று அழைப்பர். மண் பாத்திரத்தை

மண் சட்டி அல்லது மட்கலயம் என்பர். பௌத்த சமயத்தில் பிச்சை இடுவதும் பிச்சை ஏற்பதும் சமய அறம் ஆகும். அன்னதானம் செய்வது பௌத்த சமயத்தில் சிறந்த சமய அறமாக கருதப்பட்டது. எனவே ஊர் முக்கியஸ்தர்கள் பிறந்தநாள் திருமணநாள் போன்ற முக்கிய தினங்களில் ஊராருக்கு பௌத்த மடாலயங்களில் வைத்து அக்காலத்தில் அன்னதானம் வழங்கினர். இப்பழக்கம் ஊர்க் கோவில்களில் நாட்டுப்புறத் தெய்வக் கோவில்களில் இன்றும் தொடர்கின்றது.

மணிமேகலைக் காப்பியம்

பௌத்த சமய பிரச்சாரக் காப்பியமான மணிமேகலையில் மணிமேகலா தெய்வம் ஆபுத்திரனுக்கு அட்சய பாத்திரம் ஒன்றை வழங்கியது. அப்பாத்திரத்தில் இருந்து எடுக்க எடுக்க உணவு குறையாது. அதைக் கொண்டு ஆபுத்திரன் மக்களின் பசிப்பிணி போக்கினான். பசிக் கொடுமையால் பல பிணிகள் தோன்றும் என்பதை மணிமேகலை விரிவாகச் சுட்டிக்காட்டியது. பௌத்த சமயம் முதன் முதலில் பசித்தோருக்கு உணவிடுதல் பிணியுற்றோருக்கு மருத்துவ சேவை வழங்குதல் போன்ற சமூக சேவைகளில் ஈடுபட்டது.

பாறை மணிகள் rock gems

மருத்துவம், ரசவாதம், மாந்திரிகம் போன்றவற்றில் தீவிரமாக ஈடுபட்டு வந்த பௌத்தர்கள் கனிமவியலில் (metallurgy) தேர்ச்சி பெற்றிருந்தனர். பித்தளையை தங்கம் ஆக்கினர். பாறை மணிகளை வெட்டி எடுத்தனர். தங்கத்தாலும் பாறை மணிகளாலும் சிலை செய்து வைத்தனர். சந்திர காந்தக் கற்களால் சிலை செய்தனர். இச்சிலைகள் இன்று முருகன் முத்துமாரி என்று பெயர் மாற்றம் பெற்றுள்ளன. மலைப் பாறைகளை குடைந்து கோயில்களும் உருவாக்கினர். நாத்திக்ரான் இவர்கள் மெல்ல மெல்ல இந்திரன் (லிங்கம்/கந்து) , புத்தர் (யானை முகத்துடனும் மனித முகத்துடனும்), பிரமன், தாரா தேவி, கருடன், சிம்மம், யானை, மயில், நாகர் சிலைகளைச் செய்தனர்.

புத்தரின் கும்பா - ராட்சசக் கும்பா

புத்தரின் கும்பா என்பது 400 கிலோ எடை உள்ள ராட்சச கும்பா ஆகும். இக் கும்பா திருவோடு அல்ல. ஒரே கரும்பச்சை நிற மரகதப் பாறையைக் குடைந்து செய்யப்பட்டது. சுமார் 6 அடி விட்டமும் அதன் விளிம்பு ஒரு அடி அகலமும் உள்ளது. அடிப்பகுதியில் தாமரை வடிவமைப்புடன் உள்ளது. இது இதன் வெளிப்புறம் பளபளப்பாக உள்ளது. இப்போது காபூல் நகரத்தின் தேசிய அருங்காட்சியகத்தில் உள்ளது.

தங்கம், நீலமணி, மரகதக் கல் சிலைகள்

பௌத்தர்கள் தங்கத்தால் சிலை செய்வதில் வல்லவர்கள். நீலமணி மற்றும் மரகதக் கல்லால் சிலை செய்வதில் வல்லவர்கள். நாகர் உருவங்களை நீலமணி கல்லால் செதுக்கினர். மரகதக் கல்லால் கௌதம புத்தரை நின்ற, அமர்ந்த, கிடந்த கோலங்களில் செய்துள்ளனர். மரகதத்தால் லிங்க உரு செய்து இந்திர வணக்கம் செய்வர். பெண் புத்தரான தாரா தேவியை பச்சை மரகதக் கல்லால் செய்து பச்சை தாரா என்று அழைத்தனர். இன்று இவள் பச்சையம்மன் எனப்படுகிறாள்.

புத்தரின் கும்பா வரலாறு

புத்தரின் மரகதக் கும்பாவுக்கு நீண்ட வரலாறு உண்டு. கி.மு. ஆறாம் நூற்றாண்டில் புத்தர் குஷிநாரா என்ற ஊருக்குப் போகும் வழியில் ஒருவர் கொடுத்த இறைச்சியை உண்டதால் வயிற்றோட்டம் (food poison) ஏற்பட்டு இறந்தார். அவர் பயன்படுத்திய கும்பா வைஷாலியில் உள்ள பௌத்த மடாலயத்தில் இருந்தது. அப்பகுதிவாழ் மக்கள் தங்களுடைய முதல் விளைச்சலையும் முதல் கனியையும் இந்தக் கும்பாவின் முன் வைத்து வணங்கிச் செல்வர். இக் காணிக்கை முறை இன்று இந்து கோயில்களாக மாறிய புத்தர் கோயில்களிலும் தொடர்கிறது. சுமார் ஐநூறு ஆண்டுகள் இங்கேயே இருந்தது.

கப்பப் பொருளான கும்பா

கிபி முதலாம் நூற்றாண்டில் பாடலிபுத்திராவை வெற்றி கொண்ட மன்னர் கனிஷ்கர் புத்தரின் மரகத ராட்சசக் கும்பாவைக் கப்பமாக எடுத்துக்கொண்டு மொழியியலார் அஸ்வகோசரையும் அழைத்துக் கொண்டு தன் தலைநகர்

புருஷபோருக்குத் (பெஷாவர்) திரும்பினார். கி.பி. 3-9 ஆம் நூற்றாண்டு வரை இங்கு வந்த சீன யாத்திரிகர்கள் புருஷபூர் நகரில் புத்தரின் இந்தப் பெரிய கும்பா இருந்ததாகத் தெரிவித்துள்ளனர்.

கும்பாவில் குரான் வாசகம்

11ஆம் நூற்றாண்டில் பௌத்தம் அழிந்து இஸ்லாம் அரச மதம் ஆனதும் முகம்மது கஜினி மன்னர் காலத்தில் இந்த கும்பாவில் குரான் வாசகங்கள் எழுதப்பட்டு காந்தஹார் ஜும்மா மசூதியில் வைக்கப்பட்டது. குரான் வாசகங்கள் பொறிக்கப்பட்டதால் இக்கும்பா அழிவில் இருந்து தப்பியது. யாரும் இக்கும்பாவை சேதப்படுத்தவில்லை. பின்பு 1980இல் காபூல் அருங்காட்சியகத்தற்கு இடம் மாற்றப்பட்டது.

உணவே மருந்து

புத்தரின் கும்பா உணவு முறையைப் பின்பற்ற வேண்டும் என்று இன்றைய உணவியலாளர் குறியீட்டு முறையில் அறிவுறுத்துகின்றனர். உணவே மருந்து என்ற கட்டுப்பாட்டுடன் வாழ்ந்த புத்தத் துறவிகள் உடம்பை யோக சாதனமாக மாற்றினர். இதே முரளியை இன்று வலியுறுத்தம் நோக்கில் புத்தரின் கும்பா உணவுமுறையை உணவியலார் பரிந்துரைக்கின்றனர்.

நவீன புத்தரின் கும்பா

புத்தரின் கும்பாவில் (பள்ளமான பெரிய கிண்ணத்தில்) இயற்கை உணவான கிழங்கு, காய்கறி, பழங்கள், பயறு போன்ற உணவுகள் அழகுற பல வண்ணங்களில் பிரித்து வைத்து சாப்பிடுவதற்கு ஏற்றதாக உள்ளது. இந்த முறையில் ஒருவர் ஒரு பெரிய கும்பாவில் (bowl) ஆரஞ்சு, சிவப்பு, பச்சை, மஞ்சள், வெள்ளை என்று பல வண்ணங்களில் உணவு உண்பதால் சரிவிகித சத்துணவைச் சாப்பிட்டு கெட்ட கொழுப்பு, சர்க்கரை நோய் இல்லாமல் சுறுசுறுப்பாக இருப்பார். தற்காலத்தில் ஆசியா புத்தரின் கும்பா, சிக்கன் புத்தரின் கும்பா என்றும் பல பெயர்களில் உள்ளன.

சக்தி விருது வழங்கும் விழா

திருமதி மல்லிகா சைதை சா. துரைசாமி அவர்களுக்கு இதழாசிரியர் முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி அவர்கள் சிறப்புச் செய்தல்

திருமதி மல்லிகா சைதை சா. துரைசாமி மற்றும் பேராசிரியர் முனைவர் மோ மைக்கேல் ஃபாரடே அவர்களுடன் சக்தி விருதாளர்கள்



சக்தி தமிழணங்கு ஆசிரியர் முனைவர் செ ராஜேஸ்வரி அவர்கள்

வரவேற்புரை வழங்குதல்

பேராசிரியர் முனைவர் மோ மைக்கேல் ஃபாரடே அவர்கள்

வாழ்த்துரை வழங்குதல்

சக்தி விருதாளர்களுக்கு மனித நேயச் செம்மல் திரு சைதை சா துரைசாமி

அவர்கள் விருது வழங்குதல்

சக்தி விருதாளர்களுக்கு முனைவர் மோ மைக்கேல் ஃபாரடே

அவர்கள் புத்தங்கங்கள் பரிசளித்தல்

சக்தி விருதாளர்கள் ஏற்புரை

கவிஞர் சம்சுல் ஹுதா பானு விருது பெறுதல்

சக்தி விருது விழா காணொளிகள்

1. சக்தி விருது வழங்கும் விழா 2026-வரவேற்புரை, தலைமையுரை
https://archive.org/details/1-sakthi-viruthu-vizha-varaverpurai-thalaimaiyurai

2. சக்தி விருது வழங்கும் விழா 2026-வாழ்த்துரை, நூல் வெளியீடு, விருது வழங்கல்
https://archive.org/details/2-sakthi-viruthu-vizhaa-saithaiyar-vaazhtthurai-nool-veliyeedu-viruthu-vazhankuthal-compressed

3. சக்தி விருது வழங்கும் விழா 2026-விருதாளர்கள் அறிமுகம்
https://archive.org/details/3-sakthi-viruthu-vizhaa-viruthaalargal-arimugam-compressed

TAMILMAGAN's

Gene Notes in Vengai Anchor

Dr. C. Rajeswari M.A., M.Phil., Ph.D
Translator, Publisher, Madurai

Chapter 15

Dharmapuri 507 B.C.

Two men were walking along the woods. One said,

'Kapilar has told the tiny dewdrop on the blade of a grass tip will show a tall palmyra tree at a distance.'

Valluvar has said people come in a small group or in twos or threes for a drama but as soon as the drama is over they leave as a crowd'

Puunkunran has generalized everything and said, 'All places are ours and all people are our kin'.

Ok, Why do you list all these?

These poetic lines are above Buddha's preachings. In poetry, simile, lifestyle, in each and everything, these poets are above the rank. So Buddhist Sangam members are confused.

Buddhist sangam wished to grab the power by disturbing the Tamil Sangam. Guptas, Kanishkas, Mauryas, and Pallavas are ready to help them. The Buddhist Sangam felt that they need the support of the kings to go abroad and spread the religion. King Asoka had sent his two children to Ilankai for that. Similarly, this Sangam also wanted to spread the religion to Malaya, Sumatra, China, Iona, and other places. If Tamils embrace Buddhism, it will help them to establish a global association, or Sangam. So they need the support of the Tamils. The Kalabras who were ruling the northern part of Karnataka brought Tamils together to embrace Buddhism. These Kalabra kings ruled Tamils for three hundred years.

It is unbelievable. You are always boasting about the Tamils.

This conversation was between two young men. The Pride of Tamils was

explained by Maruthan and the listener was Nambi.

Maruthan asked Nambi, What happened in these three centuries?

I don't think that anything happened, but nothing was recorded.

You cannot hide the whole history of these years. All had happened in our great-grandfather and grandfather's period. They had shared their memories with their generations. So we knew what happened.

What had your grandpa told you? Asked Nambi to Maruthan.

Puranaanuuru had recorded the existence of the Tamil Sangam as Tamil kelu kuutal. Manimekalai, the Buddhist epic, says 'thenthamil Madurai', which means Tamil belongs to the south and was associated with Madurai.

Jains and Buddhists had developed Tamil, but they didn't consider this language to be more important than their religions. Tamils believe in their language is their life, but Buddhist treated languages as communication only and nothing more than that. So love for Tamil not seemed to be a positive indicator of the growth of Buddhism. So Tamils vacated the Buddhists and retained their love for their language. Buddhists with royal support destroyed the Tamil writings and palm scripts. At that time the spreading of Saivism and Vaishnavism through the Bakthi movement pulsed the strength of Tamil and propagated that Tamil is God and God is Tamil. So these two religions won the hearts of the Tamils.

Is that what your grandpa told you?

Yes, of course.

Kalbras were not Tamils. They peeped in when the Cholas and Pandyas were tired of fighting. In the Kalabra's period, there was only didactic literature. That were the only texts they read.

Maruthan asked, 'They belonged to Buddhism'

Maybe.

Why do you say 'may be'? Then which religion is in the idea of spreading itself?

Marutha, that is Buddhism only.

Yes; you are right. Buddhism and Tamil were fighting against each other.

Why do you refer to it as a fight? Buddhism supported moral education texts or didactic poems, and Tamil loved fiction or epics. Tamils were in support of marital life. They didn't favor celibacy.

It is Nambi's belief. Haa Haa



Ok, leave it. How do you say that Buddhists ignore Tamil? They had spread their religion in many countries. In every country, they spread their religion in that national language. In that case, how do they hate Tamil?

Buddhists loved their doctrines but not the language. You see, in another few years, Buddhism will be wiped off Tamil Nadu. And from the north too.

How come it will happen? Will a religion be outdated in its own birthplace but in other places?

Yes. It's going to happen right now.

No Marutha, you are wrong. Here Saivism has depth. It doesn't accept Jainism. The dispute is between Saivism and Jainism. Where does language peep in this dispute?

Yes. Saivism is related to Tamil. Murukan, the Lord of the primitive age, has a place as the son of Lord Siva in Saivism. Tamils living in other countries have six stars as their symbol, which denotes Karthikai, the star of Murugan.

Oh my God!

Look, they spread a story about the birth of Murugan to be related to Lord Siva. Siva and Parvathy were in union for forty eras. At that time, Siva wanted to kill Surapadma. Indra went and called him, but he was put to ashes by the wrath of Siva. When Siva was ferocious, his sperms spilled on Karthikai women and Lord Murugan was born as six boys. This story about the birth of Muruka is wrong.

It is a myth, a big dream of society. We can't help it.

A dream is a myth created by an individual. Isn't it? Nambi laughed.

தமிழ்மகன்

Dev rolled on his bed. He has heard about Murugan and Valli somewhere.

The conversation between Maruthan and Nambi continued.

What I want to say is, let the stories of Lord Muruga be in any form. One will definitely reach the real Murugan one day.

Is it Murugan, our great-grandfather, and Valli, a great-grandma?

Now Dev suddenly woke up from his sleep and dreams.

புதிய வெளியீடுகள்







சந்திரோதயம் பதிப்பகம், மதுரை-18.
போன் 7010997639